விலை ரூபா 2-00 | 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 | ஆடி 25 ஜுலகம் 3 | இதழ் 181

யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | (10—8—86)

## சுவிஷேச மாநாட்டுக்கு சென்ற 20 இலங்கை போதகர்கள் திடீர் தலைமறைவு!

ஏக், ஆகஸ்ட் 9

சர்வதேச சுவிஷேச மாநாட்டில் பங்குபற்றச்சென்ற இலங்கை போதகர்களில் 20 பேர் அம்ஸ்ரன் நகரில் திடீரென தலைமறைவாகி விட்டனர்.

தலைமறைவானவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள வந்தவர்கள் என்றும் ஆனல் இவர்கள் மாநாட்டில் பங்குபற்றவில்லை என்றும் மாநாட்டை ஏற்பாடு செய்த பலிகிறகாம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நெதர்லாந்துக்கு வரும் எவரும் அரசியல் தஞ்சம் கோரக் கூடாதுஎன மேற்படி நிறுவனம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இதேவேளை மத்திய ஒல்லாந்திலுள்ள உட்ரேச் என்னும் இடத்திலுள்ள முகாமில் மேற்படி போதகர்கள்

[4ம் பக்கம் பார்க்க]

● திருமலையில் இரு சம்பவங்களில்

# 6 இராணுவத்தினர் பலி!

# வான் முற்ருகச் சேதம்

## விடுதலைப் புலிகள் உரிமை கோருகிறது

(திருமலையிலிருந்து நமது நிருபர்)

திருமலையில் நேற்றுக் காலை படையினர் மீது நடைபெற்ற இரு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமுற்றனர். இராணுவத்தினர் சென்ற வான் ஒன்று போராளிகளின் தாக்குதலினுல் முற்ருகச் சேதமடைந்தது.

### கட்டைப்பறிச்சான்

திருமலை மாவட்டத்திலுள்ள கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 8-30 மணியளவில் 50-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் 'எல்வ்' வான் சகிதம் புறப்பட்டு ரோந்து சென்றனர்

முகாமிலிருந்து 500 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் ரொக்கட் லோஞ்சர் தானியங்கித் துப்பாக்கிகளால் அதிரடித் தாக்குதல் நடத்தியதால் 'எல்வ்' வான் முற்ருகச் சிதைக்கப்பட்டு தீப்பற்றி எரிந்தது, என்றும் அதில் வந்தவர்கள் அனைவரும் பலத்த காயங்களுக்குள்ளானுர்கள் என்றும், தமது தரப்பில் எதுவித சேதமுமில்லை என்றும் இச்சம்பவங்களுக்கு உரிமை கோரியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில், ரோந்துசென்ற இராணுவத்தினர்மீது போராளிகள் தாக்கியதில் 4 இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மொறவெவவில்

மொறவெவவுக்கும் கஹுவத்தவுக்குமிடையில் ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது போராளிகள் தாக்கியதில் 2 இராணுவத்தினர் பலியானதாகவும், ஒருவர் படுகாயமடைந்ததாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (மா)

## ரயில் பயணிகளுக்கு அறிவுரை

வவனியா சனி

வவனியாவில் ரயில் ஏற வரும் வடபகுதி பிரயாணிகள் தாம் சிரமமின்றி பயணத்தை மேற்கொள்ள இயலுமானளவு தம்முடன் எடுத்துச் செல்லும் வேறுநபர்களுடைய தஸ்தாவேஜுக்களை தவிர்ப்பது நன்று என்று அறியப்படுகிறது.

வவனியா ரயில் நிலைய புகுமுகவாசலில் பிரயாணிகளின் பொதிகள் பலத்த சோதனையின் பின்பே மேடைக்கு செல்ல அனுமதிக்கப்படுவதையிட்டே இந்த அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

## அகதிகள்மீது தாக்குதல் குழந்தை உட்பட நால்வர் பலி

(திருமலை நிருபர்)

திருமலை மாவட்டத்திலுள்ள கட்டைபறிச்சான் தமிழ் அகதிகள் முகாமிலிருந்தவர்களை நோக்கி ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் பலியானுர்கள். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை இப் பரிதாபகரமான சம்பவம் இடம் பெற்றது.

படுகாயமடைந்த தமிழ் அகதிகள் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டனர். [மா]

## கிளிநொச்சி - முருகண்டி பாலம் தகர்க்கப்பட்டது

வவனியா, சனி

கிளிநொச்சிக்கும் முருகண்டிக்குமிடையிலுள்ள பாலம் ஒன்றின் ஒருபகுதி நேற்று வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியர்தவர்களால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பஸ்கள் செல்வதற்கு மரக்கட்டைகள் போடப்பட்டு தற்காலிக பாலம் அமைக்கப்பட்டதின்பின் பல சிரமத்தின் மத்தியில் சேவையில் ஈடுபட்டன.

இதற்கிடையில் கடந்த இரு மாதங்களுக்கு முன் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட கரடிப்போக்கு சந்தி பாலத்தை திருத்துவதற்கு இராணுவத்தால் கொண்டுவந்து போடப்பட்ட நாலு தண்டவாளங்களையும் இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றுள்ளனர். [சி-இ]

## மட்டுநகரைக் கலக்கிய துப்பாக்கி வேட்டுகள்

(மட்டக்களப்பிலிருந்து நமது நிரு ர்]

மட்டுநகரில் நேற்று முன்தினம் இரவு ரோந்துசென்ற ஊர்காவல் படையினரினரை எதிர்கொண்ட போராளிகள் கோஷ்டி 'கிறினேட்' வீசிமுன்னேற விடாது தடுத்துவிட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்தும் அதனை அடுத்துள்ளபிரதிபொலிஸ் மாஅதிபர் அலுவலகத்தில் முகாமிட்டிருக்கும் அதிரடிப்படையினரும்தொடர்ச்சியாகத் துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தவண்ணமிருந்தனர்.

நேற்றுமுன்தினம்இரவு 7-30 மணி தொடக்கம் 6-30 மணி வரை துப்பாக்கி வேட்டுக்கள் நகரைக் கலங்க வைத்தன துப்பாக்கிச் சூட்டுச் சன்னங்கள் நகரின் நாலாபுறமும் சிதறிவிழுந்தன.

பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் அரைமைல் தூரத்திலுள்ள பெரியாஸ்பத்திரியில் நோயாளர் விடுதிக்குள்ளும் சன்னங்கள் ஊடுருவிப் பாய்ந்தனவாயினும் தெய்வாதீனமாக எவரும் பாதிக்கப்படவில்லை. (யா)

## தேவாவின் ஆதரவாளர் கடத்தப்பட்டார்

[மட்டக்களப்பு நிருபர்]

கல்குடா தொகுதியில் அமைச்சர் தேவநாயகத்தின் மற்ருெரு ஆதரவாளர் எனக் கூறப்படும் இ. போ. ச.

## ஐரோப்பிய நாடுகளில் 50 ஆயிரம் தமிழர்கள் தஞ்சம்

### —புறொன்ட்லைன் தகவல்

கொழும்பு, சனி.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில்இதுவரை காலமும் 50ஆயிரம் இலங்கைத்தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்களில் மேற்கு ஜெர்மனியில் 22 ஆயிரம் பேரும் பிரான்சில் 19 ஆயிரம்பேரும் அடங்குவர். இவர்கள் அனைவரும் 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்கள் என்று ''புறன்ட்லைன்'' சஞ்சிகையின் செய்தி ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

அச்சஞ்சிகை மேலும் தெரித்திருப்பதாவது:

''இந்தத்தமிழ் அகதிகள்வி கொழும்பிலிருந்து மொஸ்கோ கிழக்கு ஜெர்மன் வழியாக மேற்கு ஐரோப்பாவுக்கு சிறு தொகைபபணத்துடன் வந்து சேர்ந்தவர்களாகும்.

அத்துடன் இவர்கள் வெகு துணிச்சலுடன் சகல சர்வதேச எல்லைகளையும் சட்டவிரோதமாகக்கடந்துள்ளனர்,

''தமிழ்அகதிகளுக்கு, அகதிகள் அந்தஸ்து வழங்க ஐரோப்பியநாடுகள் கொள்கையளவில் மறுக்கின்றன.

''மேற்கு ஜெர்மன், நெதர்லாந்து சுவீடன, பெல்ஜியம் போன்றநாடுகளில் மிகச் சிலருக்கே அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது

''சுவிற்சர்லாந்தில் அகதிகள்அந்தஸ்து கோரிவிண்ணப்பித்த 4ஆயிரம்பேரில் இரண்டு சத வீதமானவர்களது விண்ணப்பங்களே பரிசீலிக்கப்பட்டன''. [கூ-எ)

## சிகரட் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சகல சிகரட்டுகளும் நேற்று முதல் 5 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. [வா]

## புதிதாக 250 இராணுவத்தினர்

கொழும்பு, சனி

தியத்தலாவ இராணுவ பயிற்சி முகாமிலிருந்து 250 இராணுவத்தினர் பயிற்சியை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் வெளியேறியுள்ளனர். [சி-க]

## போகவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு.

யாழ். ஆஸ்பத்திரி கழிவுநீர் அகற்றிப் பழுதடைந்ததால் கோட்டை ராணுவமுகாம் பகுதியிலுள்ள அதன் யந்திரத்தைத் திருத்துவதற்கு ஆஸ்பத்திரியிலுள்ள மின்சார ஊழியர்கள் போகவில்லையாம். பழுதடைந்த யந்திரத்தை இவர்கள் சென்று திருத்தினுர்கள் என்பது தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாருே யந்திரம் திருத்தப்பட்டுள்ளது உண்மை.

போதனுசிரியர் ஒருவரும் நேற்றுக்கடத்தப்பட்டுள்ளார்.

மொறக்கட்டாஞ்சேனை வாசியான வேலுப்பிள்ளை என்பரே கடத்தப்பட்டவராவார்.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச்சபையில் சாரதிகளுக்கு போதனுசிரியராக இவர் பலகாலம் கடமையாற்றியவர். [மா)

# விளம்பரம்

## விற்பனைக்கு

கருவாட்டுக்கேற்ற அரைத்த உப்பு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: அம்பாள் மில் (Rice Enterprice), பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி. [C 3949]

மீசாலை Stationஇல் இருந்து காட்டுவளவுக் கந்தசாமி கோவிலுக்குப் போகும் வீதியில் அமைந்த 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: K. கதிர்காமசேகரர் (விவசாய ஆசிரியர்), 'அம்மன் அகம்', மீசாலைதெற்கு மீசாலை. (C 3923)

வீட்டுத்தளபாடங்கள் தட்டச்சு யந்திரம் பாவித்த சைக்கிள், ஹோல்செற்றி, கண்ணாடி, பித்தளைப்பாத்திரங்கள், குளிர்சாதனப்பெட்டி மலிவான விலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 331, மெயின் வீதி யாழ்ப்பாணம். ('டேவிற் ரோட் சந்திக்கு அருகாமையில்) [C 3954]

ரெலி-றென்ற் டெக் Model No. N. 9600T (Manufactured by Matsuishita Electrical and Industrial Company Ltd, Japan) நஷனல் Model No 7200ற்கு சமமானது. ரொஷீபா Two-in-one Remote Control, Varandah Chairs, பெட்டகம், அலுமாரி, அல்ஷேஷன் நாய்க்குட்டிகள் இரண்டு (3 மாதம்), Royal (Portable), Atlas (Standard) தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. 81, K. K. S. Road, கொக்குவில். C 3962

இருபோகம் விளையக்கூடிய நீர்ப்பாய்ச்சல்வயற்காணி 4ஏக்கர் கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் விற்பனைக்குண்டு. திருமதி ச. மாணிக்கநடராசா, 81, K. K. S. Road கொக்குவில். [C 3964)

ஹித்தாச்சி குளிர்சாதனப் பெட்டி, சிங்கர்உயர்தரதையல் மெஷின் வகை, அலுமாரிகள் Gas and Electric Cooker with oven, சுவர்மணிக்கூடு, Three in one Hi-Fi, Room Partition Bath Tub, Hall Set, Kenwood Cake Mixture, Iron Safe, ரேடியோ, Suit Cases, மற்றும் பல விற்பனைக்குண்டு. தொடர்பு: சி பத்மநாதன். பிறீமச் ரி சேவிஸ். திருநெல்வேலி வடக்கு. (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவ பீடத்திற்கும் இடையில்] [C 3955)

வெளிநாடு செல்பவர்களின் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் வீட்டுத்தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், கட்டில் மெத்தைகள், பியானோ எக்கோடியன், சிங்கர் தையல் மெஷின், டெக் செற் T. V. டெக், Show Case கண்ணாடி மேசைகள், Meat Safe, Formica சாப்பாட்டு மேசைக் கதிரைகள். கிளாஸ் வகைகள், சில்வர் பொருட்கள் மின்விசிறிகள் மற்றும் பல உடன்விற்பனைக்கு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தியருகில்) (C-3895)

## வாடகைக்கு

இயங்கிக் கொண்டிருக்கும் பேக்கரி ஒன்று தளபாடவசதிகளுடன் வாடகைக்கு கொடுக்கப்படும். நேரில் வரவும், சண்ஸ்ரார், யாழ். மானிப்பாய் வீதி, மானிப்பாய். [C 3953]

## விற்பனைக்கு

மானிப்பாய் மேற்கில் வீடும் வளவும் வெறும் காணியும் விற்பனைக்கு. விபரத்திற்கு: ஜீவன் ரவல்ஸ் 9-00—12-00 மணி வரை. யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக, நவீன சந்தை, மேல்மாடி. C 3900

ஒரு ஸ்பானிஸ் (Spanish) Portable Type Writer தட்டச்சுயந்திரம் ஏறக்குறைய புதியது பெட்டியுடன் விற்பனைக்குண்டு கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: செ. குணபாலசிங்கம், நாமகள் வீதி. பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு. (C 3957)

நல்ல நிலையிலுள்ள ஹோல் செட் (Hall Set), புதிய ஆர்பீக்கோ சாப்பாட்டு மேசை கதிரை உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 117, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (C 3951)

நல்லூரில் சகாய விற்பனை- நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூ. 15/- க்கு எமது தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும் அறிவு நூல்களும், கீரை விதைப் பைக்கற்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். [A 1114]

Y.M.D.A நூலகத்தில் Illustrated Weekly, Mirror, Femina, மங்கை, சுமங்கலி, குமுதம், கல்கி, விகடன் இன்னும் பல சஞ்சிகைகள் மலிவு விற்பனைக்குண்டு. இன்று கடைசி நாள். 10 திருவள்ளுவர் அவனியு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [C 3971]

நல்ல நிலையிலுள்ள இரண்டு சில்லு உழவு இயந்திரம் பெட்டி, கலப்பை சகிதம் விற்பனைக்குண்டு. தொடர்பு H.S குசாமுல்லா, பிரதான வீதி, விடத்தல்தீவு. [C 3986]

## சேவை

T. V றேடியோ மற்றும் எல்லாவித மின்சார உபகரணங்களையும் திருத்துவதில் சிறம்பான சேவையை நாம் வழங்குகிறோம். டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட், 476, பிரதான வீதி, சுண்டுக்குளி (சென் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக) A 992

திருமண சேவை சிறந்தினி தோங்கத் தருவெனக் காலும் தலையளி நிறுவனம் பேர் பிறீ' மல்ரி பிறங்குமார் பெருமை வருக! வருக!! மணமகார் சாதகம் தருக! தருக!!, சார்நிறை மணவினை பெறுக! பெறுக!!, சாயி நல்லருளால் நருமதை போலுயர் நற்பணி நாளை!! திருமதி சரோஜ் யோகநாதன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. (C 3956)

வெளிநாடு செல்வதற்குத் தேவையான பாஸ்போட், விஸா, பொண்ட், ரிக்கற்றிங், ரவலச் செக் என்பவற்றைக் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்துகொள்ள Airkay and Sons, 129, Stanley Road, Jaffna. Telephone 24029, 18. 1/8, Muthalige Mawatha, Colombo. Telephone: 540581. (C 3942)

## வாடகைக்கு

மானிப்பாயில் சிறிய வீடு மின்சாரம், குழாய்த் தண்ணீர் வசதியுடன் பிரதான வீதிக்குப் பக்கத்தில் வாடகைக்கு உடனடியாக விடப்படும். மேலதிக விபரங்களுக்கு இன்றும் நாளையும் காலை 9-12 மணிக்கிடையில் நேரில் வரவும். குமரன் மில், சேச்சடி, நவாலி. (C 3947)

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள [கொக்குவில் சந்தி) கடை வாடகைக்குண்டு. 81, K. K. S. Road, கொக்குவில் (C-3963)

வீடியோ, கசற், டெக் என்பன வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: K. சங்கர், நாச்சிமார் ஒழுங்கை, நவாலி, மானிப்பாய். [C 3968]

## தேவை

இரும்புப் பணப் பெட்டி, தமிழ் தட்டச்சு இயந்திரம் (றெமிங்டன்விரும்பத்தக்கது). இரும்பு அலுமாரி விற்பனை செய்யவுள்ளோர் தொடர்பு கொள்க: பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு. (C 3969)

யாழ்நகரில் உள்ள வைத்தியசாலையில் தொழில் புரிய D.I.M.S, D.A.M பட்டதாரிப் பெண் உடன் தேவை. தொடர்பு: திருமதி (டாக்டர்) சந்தானம், 84/3, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை. (C 3948)

தையற் கலையில் நன்கு அனுபவமுள்ள கட்டிங் செய்யக்கூடிய பெண்கள் தேவை உடன்தொடர்பு கொள்ளவும்: குயிக்ஸ்ரார் காமென்ஸ் (Quick Star Garments), 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C 3978]

யாழ். நகரில் பிரபல்யமான வர்த்தக நிலையத்துக்கு விற்பனைப் பிரதிநிதி, குமாஸ்தா தேவை. அனுபவம், ஆற்றல் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரம், சான்றிதழ்களுடன் திங்கட்கிழமை 11-8-86 காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரையில் நேரில் வரவும். 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் [C 3975]

அச்சுக்கோர்க்கவும், பிளேற்றின் மிசினில் வேலைசெய்யத் தெரிந்தவருமான ஒருவர் உடன் தேவை. நேரிலவரவும். சி. சிவஞானசுந்தரம், சிரித்திரன், 550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [C-3982]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### புதிய மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் பிற்போடப்படுதல்

புதிய மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சையின் முடிவுகள் இம்மாதம் 20 ஆம் திகதி பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்படும்.

ஆங்கில வகுப்புகளும் 20-8-86 இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்.

(A 1121)

## WANTED

Import Clerk ten years experiance seeks employment under kind Director in an Import Export Organization or an Indenting Agent Contact: A.K Dharmanandan, "Ebernazer", Arasady Road, Vadaliadippu, Pandetheruppu. (C 3970)

## மணப்பந்தல்

நற்குணமுடைய 37 வயது, இந்துசமய, முக்குவ இன, அரசாங்கத்தில் கடமை புரியும் பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள் தேவை. ஆசிரியை அல்லது வேறு தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. (கிறிஸ்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்) முழு விபரங்களுடன் விளம்பர இல: C 3973 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 3973)

இந்து வேளாளர் மூன்று M.B.B.S டொக்டர் மணப்பெண்களுக்கு 32- 40 வயதுக் கிடைப்பட்ட டொக்டர், எஞ்சினியர், எககவுண்டன்ற் மணமகன் தேவை. சீதனம் Sponsor க்கு இடமுண்டு எம்மிடம் எல்லா, இன, மதத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்ஸி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் [C 3845]

லக்கணத்தில் செவ்வாயுள்ள வங்கியில் வேலைசெய்யும் 26 வயதுடைய யாழ்ப்பாணவெள்ளாளகுலப் பெண்ணுக்கு டாக்டர், என்ஜினியர், எக்கவுண்டன் வரன் தேவை. நல்ல சீதனம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும்! விளம்பர இல. A-1111, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [A-1111]

## வகுப்புகள்

Yarl Hall Main St. Jaffna. A/L 87, Organic Chemistry. ஆரம்பம் 11-8 86 திங்கள் காலை 9.00மணி ஆசிரியர் திரு மணியம் (St John's College) [C 3979]

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி சுப்பிரமணியம் கமலாதேவி

(ஆசிரியை, றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, கோப்பாய் தெற்கு)

தோற்றம்: 13-03-1956

மறைவு: 10-08-1985

எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனுடன் சங்கமித்த எம் குலவிளக்கே! நீ கட்டிய கோட்டையெல்லாம் கனவாய்க் கலைந்தாலும் என்றும் எம் நெஞ்சில் உன் நினைவுகள் மாறாது. உன் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். அன்புக் கணவர், மகன் மயூரன், தம்பிமார், தங்கைமார், மச்சாள்மார். கிறிஸ்தவக்கல்லூரிமுன்பு, கோப்பாய்.

[C-3896]

## ஐ. தே. கட்சி உறுப்பினருக்கு விளக்குவார்

கொழும்பு, சனி

உத்தேச மாகாண சபைகள் பற்றிய விளக்கங்களை ஐ. தே. க. உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்து முகமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பல அமைச்சர்களும் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று இன்றுகாழும்பில் நடைபெறவுள்ளது. [சி]

## தவறிவிட்டது

கீதா-சதாசிவம், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய் என்பவரது அடையாள அட்டை 567610543 V (1-08-86 மதியம் 11-00மணிக்கு வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட பஸ்ஸில் பயணஞ்செய்தபோது கிளிநொச்சிக்கப்பால் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஆனந்தா மோட்டர்ஸ், ஸ்ரான்லி வீதி, அல்லது மேற்காட்டிய விலாசத்தில் சேர்ப்பித்தால் சன்மானம் வழங்கப்படும். (C 3981)

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சுப்பிரமணியம் விக்னராஜா

ஜனனம்: 30-12-1927

மரணம்: 10-08-1983

இயற்கை இதுதான்
இறையடி எய்தினை!
உண்மை அதுதான்
ஆனால்
உளமது ஏற்குமோ?
சேர்த்துவைத்த இறைவனே,
பிரித்துவைக்க மறக்கவில்லை!
கோர்த்துவைத்த
மணிமாலைதனை
அவிழ்த்து வைத்ததும்
எதனாலோ?
காலங்கள் மறைந்
தனவே! நெஞ்சின்
காதல் நினைவுகள்
மறக்கவில்லை!
உடல்தான் முதுமை
யெனின்
உள்ளமும் முதுமை
யாமோ?
கடல்போல் உன்காதல்!
நெஞ்சில்
கனலாகிநிற்குதையா?
எண்ணமெல்லாம்
நீயானாய்! அதை
எழுத்தில் தான்
வடிக்கலாமோ?
அருவமாய் மறைந்
தாலும் நீ
உருவமாய் என்
அருகில்!
அருகிவரும் காலங்கள்
உன்னை
நெருங்கிவர வைக்கு
தையா!
முற்பிறப்புக் கடன்
தன்னை
முடித்துவிட்டுச்
சென்றனையோ?
எப்பிறப்பில் என்
கடனை
முடிப்பதென நானறி
யேன்! (விக்னு)

அன்பு மனைவி, மக்கள், திருமதி நே. விக்னராஜா [C-3609]

## இன்று குருபூசை

# சைவபோதமும்

# சிவபாதசுந்தரனர் வாழ்வும்



சைவப்பெரியார் எழுதிய நூல்களுக்கும் அவர் வாழ்க்கைக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பிருந்திருக்கிறதுஎன்ற உண்மை இன்று பலருக்குத் தெரியாது. அவர் எழுதிய நூல்களிற் காலத்தால் முற்பட்டவை 'சைவபோதம் முதற் புத்தகம்', 'சைவபோதம் இரண்டாம்புத்தகம்' 'சைவபோதம் மூன்றும் புத்தகம்' எனப்படும் திருவருட்பயன் விளக்கஉரை எனும் மூன்று நூல்களுமாகும்.

பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் (1878—1953) தாம் வாழ்ந்தபடியே எழுதியவர். தாம் எழுதியபடியே இறுதிவரை வாழ்ந்துகாட்டிய செயல் வீரர்; அவ்வாறே மற்றவர்களும் வாழவேண்டுமென்பதிலும் அக்கறைகொண்டிருந்தவர். இவற்றினை அவர் எழுதிய சைவபோதத்தில் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

உண்மையான சைவசித்தாந்தி எப்பொழுதும் இன, மத, மொழி பேதங்களைக் கடந்த வர்க்கபேதமற்ற சமவுடமைவாதியாகவே திகழ்வான் என்கிற உண்மை சைவசித்தாந்தம் பற்றிப் பேசுகிற பலருக்குத் தெரிவதில்லை. மார்க்ஸிய சித்தாந்தம் பிற்பட்டது சைவசித்தாந்தம் இதனைவிட எத்தனையோ நூற்றாண்டுகள் முற்பட்டதும் மேம்பட்டதுமாகும். சைவசித்தாந்தம் கூறுகின்ற அரிய, பெரிய உண்மைகளையெல்லாம் தமது சைவபோத முதற் புத்தகத்தில் யாவரும் விளங்கும்படியான சிறிய கதைகள் பலவற்றின் மூலம் எழுதிப் பாயிரம் பெறுவதற்காக சேர் பொன். இராமநாததுரை, Kt K c. (1851 — 1930) அவர்களிடம் கொடுத்தனர்

சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை, சிவபெருமான் மண்சுமந்தமை, அரசன் வண்ணானைக் கும்பிட்டமை, கிழ சாம்பாள் போன்ற கதைகள் சமவுடமைச் சிந்தனையை இராமநாதன் அவர்கள் மனதில் தோற்றுவித்தது. அவர் சில நாளின் பின்னர் பெரியாரைச் சந்தித்தபோது ''நீங்கள் பிள்ளைகளுக்கு கொம்யூனிஸ்ட் கொள்கையை போதிக்கிறீர்கள் போலிருக்கிறது'' என்று கேட்கவே அதற்குப் பெரியார் ''நீங்கள் கூறுகின்ற கொம்யூனிசம் மனிதரைப்பற்றியே பேசுகின்றது. ஆனால் சைவசித்தாந்தம் உலகின் அனைத்துஉயிரினங்களையும் பற்றிப்பேசுகின்றது'' என்றார். ஆம். சிவபெருமான் சம்பந்தருக்கு மாத்திரம் பாலைக் கொடுக்கவில்லை. பன்றிக்குட்டிகளுக்கும் பாலைக் கொடுத்தவர்தான். பிற்காலத்தில் பெரியாரவர்கள் சமாசன, சமபோசன போராட்டத்தில் பங்குகொண்ட தன் அடிப்படை இங்குதானிருக்க வேண்டும்.

திருவாசகத்தில் பெரியாருக்கு விருப்பமதிகம். திருவாசகம் படிப்பவன் மறுவுலகைப் பற்றி அஞ்சத்தேவையில்லை என்பது அவர் கருத்து. போற்றித்திருஅகவலில் ''எனக் குருளைக்குருளினை போற்றி'' என வருகிற பாடலடியின் பொருளினையே முதலாம் பாடத்தில் 'சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை' என்ற தலைப்பில் விளக்கியிருக்கிறார்.

பெரியாரின் தாயாராகிய வள்ளியம்மையார் பெரியாரைச் சிறுவயதில் புலோலி மருதடி வயிரவசுவாமி கோவிலுக்குத் தினமும் அனுப்பி வைப்பார். ஒருமுறை மழை அதிகம்பெய்து வெள்ளம் ஆறாகப் பாய்ந்ததினால் பெரியாரால் வழமைபோல கோவிலுக்குச் செல்ல முடியவில்லை ''நாளைக்குச் செல்லலாம்'' என்று தாயாரிடம் கூறிய போது ''அப்படியானால் இன்றைக்குச் சாப்பிடாது நாளைக்குச் சாப்பிடலாம்'' என்று தாயாரிடமிருந்து பதில் வந்தது அதன்பின்னரே பெரியார் கோவிலுக்குச் சென்று வந்தாராம். ''தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்'' என்பதுபோல இந்த ஒழுக்க முறைதான் பெரியார் விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபராகச் சென்றபோதும் இளைப்பாறிய பின்னர் கந்தவனக் கடவையில் தவ வாழ்வினை மேற்கொள்ளவும் அங்குள்ள சுப்பிரமணியப் பெருமானுக்குத் தினமும் பணிகள் செய்யவும் காரணமாக இருந்திருக்க வேண்டும். ''தினமும் ஆலயத்திற்குச் செல்லவேண்டும்'' என்ற இளமை அனுபவமும் நல்லெண்ணமும்தான் சைவபோதத்திலும் 'சிவபெருமான் தாயானமை', 'சிவைக்கியர்', 'ஒரு இராசா' முதலான கதைகளைச் சேர்க்கும் ஞாபகத்தினைப் பெரியாருக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

சைவாலயங்கள் பலவற்றில் மிருகபலியிடுதல் எனும் கொடுமை பெரியார் காலத்திலும் மும்முரமாக இருந்திருக்கிறது. வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோவில், சுழிபுரம் பத்திரகாளியம்மன் கோவில், சுழிபுரம் காளுவன் வயிரவசுவாமி கோவில் போன்றவற்றில் ஆடு, கோழி, மிருகபலி மெத்தத் தொகையாக நடைபெற்ற காலத்தில் பெரியாரவர்கள் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அதிபராக இருந்தார். அக்காலத்தில் பலியிடுதலைக் கண்டித்து பெரியார் தலைமையில் கூட்டங்கள் நடத்தப்பட்டன ஒருமுறை வழக்கம்பரை அம்மன் கோவிலில் பலியிடுதல் நடைபெற்ற வேளையில் பண்ணாகத்

மு கௌரிகாந்தன்

தைச் சேர்ந்த சிலர் தொடக்கிய கலவரத்தைப் பயன்படுத்தி அக்காலத்தில் அரசாங்க அதிபராக இருந்த விறிமன் [H. R. Freeman] மூலம் பெரியாரவர்கள் இவ்வாலய பலியிடுதலை தடை செய்திருந்தார் மேலும் பெரியாரவர்கள் பலியிடும் தினத்தன்று பாடசாலைக்கு வருகைதராத மாணவர்களைக் கணக்கெடுத்து மறுதினமே கைப்பிரம்பினால் தக்க தண்டனை வழங்கி விடுவார். அக் காலத்தில் மாணவர்களுக்கு பெரியார் தண்டனை வழங்குவதை மாணவர்களின் பெற்றோர் கேள்விப்பட்டால் மீண்டும் தம் பிள்ளைகளுக்குத் தாங்களே தண்டனை வழங்கி விடுவார்களாம்.

சைவ போதத்தில் குருவும் சீஷனும் எனும் பாடத்தில் குரு சீட உரையாடல் மூலம் பலியிடுதல் கண்டிக்கப்படுகிறது. இவ்வாறே ஓர் உபாத்தியாயர் எனும் பாடத்தில் உபாத்தியாயர் மாணக்கன் உரையாடலில் மதுவின் தீமை பல உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

கிறிஸ்தவ பாதிரிமார் சைவ மக்களுக்கு உணவு, உடை, கல்வி, உத்தியோகம் போன்றவற்றைக் கொடுத்து மதம் மாற்றிய கொடுமை பெரியார் காலத்திலும் மும்முரமாக நடைபெற்றிருக்கிறது. ஒரு புலயன் எனும் பாடத்தின் மூலம் பெரியார் இதனைக் கண்டிக்கின்றார். ''சங்கநிதி பதுமநிதி'' இரண்டும் தந்து என்று தொடங்கும் அப்பர் சுவாமிகள் பாடலின் பொருளைப் பெரியார் கிறித்தவ மதமாற்றத்தை எதிர்க்க இப் பாடத்தில் நன்கு பயன்படுத்தியிருக்கிறார். பெரியார் சமயமாற்றத்தை ஒருவன் தனது சமயத்தை நன்றாகப் படித்து விளங்கி மற்றச் சமயத்தையும் நன்கு படித்து விளங்கி தானிருக்கும் சமயத்திலும் பார்க்க மற்றச் சமயம் உயர்ந்ததாயின் தாராளமாகவே மாறலாமென்ற கருத்தினடிப்படையில் மதமாற்றத்தை ஆதரிக்கிறார் எனலாம்.

இவ்வாறாகப் பல வகையிலும் பெரியாரின் வாழ்க்கையுடன் தொடர்புடையதான சைவபோதம் முதற் புத்தகத்தினைப் பெரியார் எழுதி வெளியிட்ட ஆண்டினைச் சரியாகக் கணிப்பிட்டுக் கூறமுடியாதிருக்கிறது சைவபோதம் இரண்டாம் புத்தகம் 1915ம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்டுள்ளது பெரும்பாலும் இதற்கு இரண்டொரு வருடம் முன்னதாகவே முதற் புத்தகம் வெளியிடப் பட்டிருக்க வேண்டும்.

சைவபோதம் முதற் புத்தகத்தின் 22ம் பதிப்பு இரண்டு வருடங்களுக்கு முன்னரே வெளி வந்து விட்டது. இதன் 21ம் பதிப்பு 1962ம் ஆண்டாகிய சுபகிருது ஆனி மீ வெளிவந்துள்ளது. இன்னோர் 22ம் பதிப்பு 1958ம் ஆண்டாகிய விளம்பி சித்திரை மீ வெளிவந்துள்ளது ஆனால் மூன்று பதிப்புகளும் ஒரே அச்சு யந்திரசாலையிலே அச்சிடப் பட்டிருக்கின்றன. 1962ம் ஆண்டு 21ம் பதிப்பிற்கும் 1984ம் ஆண்டு 22ம் பதிப்பிற்குமிடையில் வித்தியாசமில்லை. ஆனால் 1958ம் ஆண்டு 22ம் பதிப்பிற்கும் 1984ம் ஆண்டு அல்லது 1962ம் ஆண்டுப் பதிப்பிற்குமிடையில் வித்தியாசம் காணப்படுகிறது முதற் புத்தகத்தின் 12ம் பதிப்பு 1941ம் ஆண்டாகிய விஷு கார்த்திகை மீ வெளியிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில் காணப்படுகின்ற சந்திரவதி [I, II] என்ற பாடம் 84ம் ஆண்டு வெளிவந்த பதிப்பிலும் இடம்பெறவில்லை. இதற்கேற்பவே பழைய பதிப்பொன்றில் இந்நூலுக்கு இராமநாததுரையவர்களால் வழங்கப்பட்ட பாயிரத்தில் விளக்கம் கூறப்பட்ட வாக்குத் தவறல் ஆகாது என்பதும் இப் பதிப்பில் நீக்கப்பட்டு விட்டது. இவ்வாறான தவறுகள் இனிமேலும் நிகழாதவாறு பார்த்துக் கொள்ளுதல் ஈழத்துத் தமிழ்ச் சைவர் அனைவரினதும் கடமையன்றோ?

சைவ போதம் இரண்டாம் புத்தகத்தினை சைவ சித்தாந்தச் சுருக்கமெனவும் அழைப்பர். இதன் 15ம் பதிப்பு 1983ம் வருடம் வெளியிடப் பெற்றது. பண்டிதமணி சி.

[4-ம் பக்கம் பார்க்க]

---

★ இன்று நல்லூர் கொடியேற்றம்

## நல்லைப்பதிக்கிறைவன்

அட்டசித்தி யைஸ்வரி மானமகப் பேறுபெற்று
இட்டமுட னேயருள்வா னேர்நல்லைச்-செட்டியவன்
நின்று நினைந்துருகி நித்தமும் பத்தருக்கே
என்று மருள்புரிவா னெண்ணு.

0 0

ஆறுதலைகொண்ட அந்திவண் ணன்புதல்வன்
ஆறு தலைகொண்ட அன்புருவன்-கூறுநல்லைக்
கோமளஞ்சேர் கந்தனடி கைதொழுது கும்பிட்டான்
போமத் துயர்நிலையப் போது.

0 0

ஆலஞ் செறிகண்டன் அத்தன் அருள்கந்தன்
ஞாலஞ் செறிதமிழர் நாடுபவன் - கோலஞ்செய்
நல்லைப் பதிக்கிறைவன் நாடுமடி யார்க்கன்பன்
நல்லை முருகனடி நாடு.

—கவியரசு வெண்பாமணி முருககூரியன்

## விநாயகனே துயர் களைவாய்

மக்கள் துன்பம் களைந்திடும் வரதவிக்கின விநாயகனே
ஆனைக்கோட்டை பதிவாழ் ஐங்கரனே
மூவுலகும் போற்றும் கஜமுகனே
அன்புடனே உன்னடி தொழுதேன் துன்பம்
களைந்திடுவாய்.

—சூரியகலா கைலாசபிள்ளை

★ இன்று ஆனைக்கோட்டையூர் ஸ்ரீ வரதவிக்கின விநாயகர் கொடியேற்றம்.

---

'பெரி'ஸ்கோப் —

# 'இந்த நாடகம் அந்த மேடையில் எத்தனை நாளம்மா?'

மாவிட்டபுரத் தேரோட்ட மஹோற்சவத்தில் பலாலி முகாமிலுள்ள 'பெரியவர்'களுக்கு கலந்து கொண்டு எம்பெருமான் முருகனைத் தரிசிக்கவும் தொழவும் தணியாத தாகம்!

நயினை அம்மன் கொடியேற்ற விழாவினைத் தமது 'வீடியோ'க்களில் சிறைப்பிடித்துக்கொண்டு செல்ல காரைநகரைத் தம் நகராக்கிக் கொண்டோருக்கு ஒரு பொல்லாத வேகம்!

இராமலிங்க வள்ளலார் யாசித்ததும் பூசித்ததுமான சர்வமத சமரசம் இப்படித் திடீரென வருமென்று யார் கண்டது?

அல்லது, இது ஆடி அமாவாசையோடு சித்திக்கும் என எந்த மடையன் சிந்தித்திருப்பான்?

அப்பல்களைப் பறிகொடுத்த அப்பாவிப் பிள்ளைகளின் எண்ணிக்கை இந்த ஆண்டில் அதிகரித்திருக்கக் கூடுமென்ற ஆதங்கத்தில்தானோ (இல்லை, ஆனந்தம் தானோ) ஆடியமாவாசையன்று பிதுர்க்கடன் தீர்க்க இந்த அனுமதியும், அவகாசமும் வழங்கப்பட்டது?

ஈழத்துக் 'காசி'யான கீரிமலையில் இந்த மண்ணின் மைந்தர்கள் தோய்ந்தெழுவதற்கும அனுமதியும் அவகாசமும் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமக்கு!

கீரிமலைக்குப் போனவர்கள் அன்று கண்டது என்னும் தண்ணியுமிறைத்து பிதுர்க்கடன் சடங்கை நடாத்தி முடிக்க உதவிய அந்த வைதீக ஐயர்களை மட்டுந்தானா? இல்லை—

வரலாற்றுப் புகழ்பெற்ற தலத்தில் ஏதாவது அனர்த்தம் நிகழுமோ என்ற அச்சத்தில், வெய்யில் நெருப்பாய்க் காய்ந்த நேரத்திலும் கையில் 'வேலை' வைத்துக்கொண்டு வீதியோரம் காவல் புரிந்த மறவர்களைப் பார்த்தபோது தேவர்களைப் பாதுகாக்க அசுரருக்கெதிராய் நடந்த போராட்டத்தில் தளபதியாய்ச் சென்ற அந்த மயிலேறும் வீரபாகுதேவனின் ஞாபகம் தான் வந்தது.

இங்குள்ள இந்துக் கோவில்களையே 'ஷெல்'லரிக்கச்செய்த பெருமையைச் சம்பாதித்துக் கொண்டவர்கள் இன்று கொடியேற்ற விழாக்களையும் தேரோட்ட உற்சவங்களையும் 'வீடியோ'க்களில் சிறைப்படுத்திக் கொள்ள வந்த திடீர் அவசியமென்ன, அவசரமென்ன?

எத்தனையோ நிகழ்வுகளையெல்லாம், 'இதுதான் உண்மை' எனப் படம்போட்டுக்காட்டிச் சாதிக்கமுடியாதவற்றை, 'இங்கும் இந்துமதம் வாழ்கிறது' எனப் படம்போட்டுக்காட்டி தம் விஷயங்களைச் சாதிக்கப் பார்க்கிறார்கள் சில தம்மிஷ்டர்கள்'!

சும்மா சொல்லக்கூடாது-கண்ணதாசன் சொன்னாலென்ன, சொல்லாவிட்டாலென்ன இந்துமதம் அர்த்தம் உள்ளதுதான்!

## மரண அறிவித்தல்

### பூரணம் பாலசுப்பிரமணியம்

பூரணம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஒய்வு பெற்ற வண்ணார்பண்ணை தென்மேற்கு கிராமத் தலைமைக்காரன் திரு சு. க. பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், விவேகானந்தா (வீரகேசரி), ஸ்கந்தானந்தா (எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனம்), சிவானந்தா (மன்னார் உள்ளூராட்சி திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்), சண்முகானந்தா [துபாய்], நித்தியானந்ததேவி, அருளானந்ததேவி [ஆசிரியை] ஆகியோரின் பாசமிகு தாயாரும், புனிதவதி, சற்குணவதி, இந்திராணி, சந்திரவதனு [ஆசிரியை, கணேசலிங்கம் Sd and cc], மேகநாதன் (தொலைதொடர்புதிணைக்களம்] ஆகியோரின் அருமை மாமியாரும், நிரோஷன், அருணு திவாகர், நிருத்தாஞ்சலி, மதனு, உமைகரன் ஆகியோரின் அன்புப்பாட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் நாளை [11-8-86] திங்கட்கிழமை 385, காங்கேசன்துறை வீதி இல்லத்திலிருந்து மாலை 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

A 1122

### திருமதி மார்க்கண்டு கெங்கநாயகி

[இளைப்பாறிய ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி]

குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், பெரியரசடிவீதி, சாவகச்சேரி வடக்கில் வசிப்பவருமாகிய திருமதி மார்க்கண்டு கெங்கநாயகி (இளைப்பாறிய ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி 9-8-86ந் திகதி சனிக்கிழமை காலமாகிவிட்டார் இவர் மார்க்கண்டுவின் அன்பு மனைவியாரும், வரகுகராணி, வனிதாமணி, சரவணபவான் (முன்னைநாள் நில அளவையாளர்). முத்துக்குமாரசாமி (பிரான்ஸ்), ஆனந்தகுமாரசாமி (லிகிதர் கமத்தொழில் காப்புறுதிச் சபை வவனியா) சதானந்தன் [லிகிதர் காணிக்கந்தோர் கிளிநொச்சி) ஆகியோரின் தயாரும், நடராசா (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி), வேல்முருகு (சவுதி அரேபியா] இராதா (ஆசிரியை றிபேக்கல்லூரி சாவகச்சேரி], சிறி றஞ்சினி (ஆசிரியை முருகண்டி இந்து மகாவித்தியாலயம்] ஆகியோரின் மாமியாரும், பார்வதம் [இளைப்பாறிய ஆசிரியை குரும்பசிட்டி] சிவகுருநாதன் ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-8-86 [இன்று] ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

மார்க்கண்டு,
[C-3993] பெரியரசடி சாவகச்சேரி வடக்கு.

### செல்லத்துரை இராசையா (திருநாவுக்கரசு)

கொக்குவில் சரு வேலடி ஒழுங்கையைச் சேர்ந்த இராசையா சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் நவமணியின் அன்புக் கணவரும் இராசேந்திரம் இராசதேவி வசந்தராஜன் [ஜேர்மனி] ஆகியோரின் தந்தையும், குணரத்தினத்தின் மாமனுரும், தங்கச்சியம்மா, பரமேஸ்வரி, இரத்தினப்பிரகாசம் (Central Bank) நடராசா (Colombo Plan Beru]. சுப்பிரமணியம் (Cogelare) ஆகியோரின் சகோதரரும், நடராசா, குமாரசாமி, காலஞ்சென்ற தவமணி கந்தையா, நவரத்தினம் [Ceylon Trading Co]. சிங்கரத்தினம் (கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-8-86 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C 3994] தகவல்: இ. இராசேந்திரம்.

## சைவபோதமும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கணபதிப்பிள்ளை (1899-1986) அவர்களால் 'பிரஸ்தானசதுட்டயம்' என அழைக்கப்பட்ட சைவ சாஸ்த்திரங்கள் சிவஞானபோதம். சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் எனும் நான்குமாகும். இவற்றில் திருவருட்பயனுக்கு சிறந்ததொரு விளக்கவுரையினைப் பெரியாரவர்கள் 1918ம் ஆண்டு எழுதியிருந்தார்கள். இதன் 12ம் பதிப்பு 1980ம் ஆண்டு வெளி வந்தது. இதற்கு நிகரான உரை இன்றுவரை எங்குமில்லாத சிறப்பினையுடையது. இவ்விளக்கவுரையாகும். மேலும் பெரியார் எழுதியுள்ள THE SIVA SCHOOL OF HINDUISM என்ற நூல் இன்றுவரை காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் ஒரு பாட நூலாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாகப் பெரியாருடைய நூல்கள் இன்றுவரை வாழ்ந்து வருகிற பெருஞ் சிறப்பினையுடையவை. சமயமென்பது வையத்துள் வாழ்வாங்கு வாழவும் அதன் மூலம் வானிலை அடைவதற்கான நெறி முறையைக் கூறுவதேயன்றி வேறொன்றுமில்லை. இவற்றினையே பெரியார் வாழ்விலிருந்தும் அந்த வாழ்வின் வெளிப்பாடான நூல்களிலிருந்தும் நாம் கற்றொழுக வேண்டியிருக்கிறது.

## சுவிசேஷ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை சுவிசேஷகர்கள் தமது உறுதி மொழியை மீறி இவ்வாறு நடந்து கொண்டமையையிட்டு மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுஇவ்வாறு இருக்க ஒல்லாந்து அதிகாரிகள் இவ்விடயம்தொடர்பாக உத்தியோகப் பூர்வ விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

[கூ-எ]

## இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்: ஆடி
திகதி: 25 (1986-08-10)
கிழமை: ஞாயிறு
திதி: பஞ்சமி
மு.இ வரை
நக்ஷத்திரம்: அத்தம்
மு.இ.வரை

### மேடம்

பிதாவழி மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கிடைக்கலாம். பிறந்தகத்தின் நினைவு தலை தூக்கக் கூடும். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். புத்திரர்களால் சுகமும் உண்டு.

### இடபம்

தன்மான வாழ்வுடன் தம் உடமை சேரும். மனதுக்கு ஏற்ற வண்ணம் மாற்றங்கள் இடம் பெறும், முயற்சியால் உயர்ச்சியுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டு.

### மிதுனம்

மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். சகோதரபாசங்கள் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடம் உண்டு பெரியோர்கள் ஆதரவும் உண்டு. மகிழ்ச்சிகரமான வாரம்.

### கடகம்

குறுக்கு வழியில் இறங்குவதால் சங்கடப்பட நேரிடும். இன்னலின் பின்னல் சோர்வைத்தரலாம். முன்னேற்றம் தடைப்படும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

### சிங்கம்

எண்ணத்தின் தாக்குதல் நெஞ்சத்தைப்புண்ணுக்கும் அற்ப விடயத்திற்குக் கூட பொல்லாங்கு கேட்க நேரிடும். தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள். சீறிவரும் கோபத்தை அடக்கவும்.

### கன்னி

மனக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். உடல் நலத்திலும் பாதிப்பு ஏற்படலாம். அபாயகரமான காரியங்கள் எதிலும் பங்கு பற்றக் கூடாவாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

### மகரம்

மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கும். பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளினல் பெருமைக்கும் இடமுண்டு ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவுகொடுப்பார்கள்,

### கும்பம்

ஆசை ஆலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. வீட்டில் சிறுபிணிக்கு இடமுண்டு. சிறியவிடயத்திற்குக் கூட பெரிய கோபம் ஏற்படலாம். நீண்ட நாள் உறவில் முறிவும் ஏற்படும். எவ்விடயத்திலும் அவதானம் வேண்டும்.

### மீனம்

அனந்தமயமானவாழ்க்கை. நண்பர்களின் வருகை உற்சாகப்படுத்தும். களஸ்திர வழியால் ஒளிமயமான சூழ்நிலையும் உருவாகும் கல்வித்துறையிலும் கணிசமான முன்னேற்றம் உண்டாகும். கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக்கடத்துவீர்கள்.

### துலாம்

எண்ணியகருமத்தில்வெற்றியுண்டு. சொகுசான வாழ்வு கிடைக்கும். துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர் விடும் குடும்பத்திலும் இன்பமான சூழ்நிலை உருவாகும். உறவினர்கள்மத்தியில் ஒற்றுமை மலரும்.

### விருச்சிகம்

சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றும். உள் வீட்டிலேயே பூசல்கள் தலை தூக்கும். தொழில்புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறும். நண்பர்களும் சூழ்ச்சிவலை விரிப்பதற்கு முன் நிற்பர்.

### தனுசு

வாகனவிருத்தியுடன் இல்லத்திலும் திருப்திகாணும். மோகன வாழ்வும் கிட்டும். முன்னேற்ற வாழ்வுமுண்டு. முதியோர் ஆசியும் உண்டு மருத்துவத்துறையில் ஈடுபடுவோர்களுக்கு மகத்தான வாரம்.

திருமலை வே. ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

கனடா

சவுதிஅரேபியா

ஈராக்

[1] கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச்செல்வார். செல்ல விரும்புவோர் 17ந் திகதிக்குப் பிந்தாமல் தொடர்புகொள்ளவும்.

[2] சவுதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labour] வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19ந் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

[3] ஈராக் நாட்டில் [Hospital cleaners' ஆஸ்பத்திரி கிளினர்ஸ் ஆகச் செல்ல விரும்புவோருக்கு மிகவிரைவில் ஒழுங்குகள் செய்து தரப்படும். செல்ல விரும்புவோர் பாஸ்போட்டுடனும், 6படங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொன்ட், ஆகியனவும் செய்து தரப்படும்.

தொடர்பு:

**N. BALA**

பஸ் வழி இல:
764, பலாலி, வீதி
கோண்டாவில்.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [C3988]


## இன்று புங்குடுதீவு முத்துமாரியம்மன் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 10ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

14ம் திகதி பக்தமுத்திபாவனோற்சவமும், 15ம் திகதி நவசக்தி அர்ச்சனையும், 16ம் திகதி திருவிளக்குப்பூசையும், 17ம் திகதி வேட்டைத்திருவிழாவும் நடைபெறும்.

18ம் திகதி திங்கட்கிழமை அம்பாள் ரதபவனி இடம் பெறும். அடுத்த நாள் தீர்த்தத்திருவிழா.

பகல் திருவிழாக்கள் காலை 7 மணி தொடக்கம் 11 மணி வரையும் இரவுத்திருவிழா பிற்பகல் 3-45 மணி தொடக்கம் இரவு 7 மணிவரையும் நடை பெறும்.

உற்சவ காலங்களில் கொழும்புத்துறை சிவ ஸ்ரீ ச. தி பாலசுப்பிரமணியக்குருக்கள் பிரதம குருவாக கடமையாற்றுவார்

யாழ்ப்பாணத்திலிருந்து தரிசனத்திற்கு வரும் அடியார்களுக்கு விஷேச போக்குவரத்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (அ)


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

அளவெட்டி வடக்கிலும் கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு மேற்கு வீதியிலும் உள்ள சட்டையன் சீமா என்னும் 10 நில பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க:- திருமதி. தர்மலிங்கம் கேணிக்கரை அளவெட்டி.

(C 3987)

**லிடோ**

காலை 10-30, 2-30, 6-30
பாண்டியன் - ரேவதி நடித்த
**புதுமைப் பெண்**
(புதிய பிரதி கலர்]
அடுத்த படம்
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate and Action Colour)

**வெலிங்டன்**

வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனு வீரப்பா, நம்பியார்
**தங்கமலை ரகசியம்**
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

**உஷாமினி**

10-30, 2-30, 4-45, 7-00, 9-00
AMERICAN COMMANDO
இதுவரை வெளிவராத மிகச்சிறந்த தாக்குதல் படம்-அதிநவீனஆயுதங்கள் கண்டிப்பாக இன்றைய இளைஞர்கள் பார்க்க வேண்டியபடம்.
(Adults only)

# புதுச்சட்டை கிடைக்குமா?

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

பாண்டிய மன்னன் ஒரு நாள் ஊர்காவல் படையில் ஒருவராக மாறினன். ஒரு வீதியிலே சென்றபோது ஒரு வீட்டிற்குள்ளிருந்து தம்பதியர் இருவர் பேசும் குரல் கேட்டது. வியாபார நிமித்தம் குடும்பத் தலைவன் வெளியூர் செல்ல இருப்பதாகவும் தலைவியைக் கவனமாக இருக்கும்படியும் தலைவன் கூறுகிறுன். நாட்டின் தலைவனுன பாண்டிய மன்னன் அன்று தொடங்கி அந்த வீட்டிற்குக் காவல்காரனுக மாறத் தொடங்கினன்.

திடீரென ஒரு நாள் காவலின் நிமித்தம் மன்னன் சென்ருன். யாரோ ஒரு ஆணின் குரல் அவ்வீட்டின் உள்ளே கேட்டது. கலவரம் அடைந்த மன்னன் திடீரென அவ் வீட்டுக் கதவில் தட்டினன். சற்று யோசித்தபோதுதான் வெளியூர்போய்த்திரும்பி வந்த தலைவன் அங்கிருக்கிறுன் என்பது அரசனின் மூளைக்குப்பட்டது.

தனது மனைவியைத் தலைவன் சந்தேகிக்கலாம் என நினைத்த ''ஊர்காவலாளர்'' ஆகிய பாண்டிய மன்னன் எல்லோர் வீட்டுக் கதவிலும் தட்டிவிட்டு அரண்மனையை அடைந்தான். அங்கே அரசனுக்குரிய புதுச் சட்டையை மாட்டிக்கொண்டான். பலகதவுகளில் அழைப்புத் தட்டல்கள் கேட்டதால் அந்த அப்பாவிப் பெண்ணும் சந்தேகத்துக்குள் மாட்டுப்படாமல் கணவனிடமிருந்து தப்ப முடிந்தது.

பாண்டிய மன்னனின் இடத்தில் இலங்கை ஊர்க்காவல் படையை வைத்துக் கற்பனை செய்து பார்த்தேன். எனது கற்பனையை நான் எழுத விரும்பவில்லை. நீங்களே.....

★

தலையிடியை மாற்றத் தலையணையை மாற்றலாம் என்று சிந்திக்கின்றது அரசாங்கம். எனவே எமக்கும் புதுச்சட்டை வேண்டும் என்று சிந்திப்பதில் தவறு இல்லை. உலக வாழ்க்கையைத் துறந்த புத்த பகவான் தனக்குப் போட்ட புதுச்சட்டை பஞ்சள் நிறத்தில் அமைந்திருந்தது. அந்தச் சட்டை இப்போது சீனு, பர்மா, இலங்கை எங்குமே புகழ் பெற்றுவிட்டது. புத்தரின் அடிச்சுவட்டில் போவோர் இந்த மஞ்சள் சட்டையை அணியக்கடவர்!

முசோலினியை இத்தாலியில் பின்பற்றியோர் போட்ட சட்டை செஞ்சட்டை! இந்தச் செஞ்சடடையினர் ஆயுதம் தாங்கி ஆட்சியைக் கைப்பற்றச் சென்றபோது ஆட்சியில் இருந்த மன்னனின் படைகள் எதிர்த்துப் போரிடவில்லை. அதற்கு மாருகப் பின்வாங்கி ஓடினர்! ஆட்சியைச் 'செஞ்சட்டை'யினர் 1931-இல் பிடித்தனர்!

திராவிடக் கழகம் தமிழ் நாட்டில் பகுத்தறிவுச் சுடர் கொளுத்த, கறுப்புச் சட்டை அணிந்திருக்கின்றனர். ஈ. வே. ரா. பெரியாரின் பின்பு வீரமணி தலைமையில் இப்பட்டாளம் அணி திரண்டுள்ளது.

★

தமிழ் மக்களுக்கு அதிக காலமாக உபத்திரவம் செய்து வந்த சட்டைகளில் மஞ்சள் காக்கிச்சட்டை முக்கிய இடம் வகித்தது. தமிழாராய்ச்சி மகாநாட்டில் தொடங்கிய இந்தச் சட்டையின் உபத்திரவம் சில காலங்களில் முடிவடைந்தது.

இப்போது தபால்காரனின் வடிவில்தான் அந்தசட்டையை நாம் தரிசிக்க முடியும். அந்தச் சட்டையின் இடத்தைப் பின்பு பிடித்தது காக்கிச் சட்டை நம்பர் 2. அவர்களும் சில கால ஆட்சிக்குப் பின்பு முகாம்களுக்குள் முடங்கி ''ஷெல்'' ஆட்சி நடாத்துகின்றுர்கள்!

இவர்களின் தொல்லைதான் தீர்ந்தது என்றுல் கடலில் திரியும் கறுப்புச்சட்டை தமிழ் மக்களுக்கு 'யமதூதர்களாக' மாறிவிட்டார்கள். பகுத்தறிவுக்குரிய கருஞ்சட்டையை அவர்கள் கொப்பியடித்தது பெருமைக்குரியது அல்ல!

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆட்சியைப் பிடிப்பதற்காகத் தனது மதச் சட்டையை மாற்றியவர். பின்பு ஒக்ஸ்போர்ட் உடையையும் மாற்றி ஆயுள்வேத வைத்தியர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் ஒரு தேசியச் சட்டையை உண்டாக்கினர்.

இந்தச் சட்டை ஆட்சியைக் கைப்பற்றியும், தமிழ் மக்களின் பிரச்னை, அசட்டைசெய்யப் பட்டது.

தமிழ் மக்கள் பிரச்னைக்கு மாநிலச் சட்டையைப் பண்டாரநாயக்கா போட்டபோது கண்டியில் வைத்து ஜே. ஆர். அதை உரிந்துவிட்டார்.

இப்படியே காலம் சென்றது.

இப்போது—

ஆண்டு—1986.

ஆயுதம் ஏந்திய பல போராளிக்குழுக்களைத் தமிழ் இளைஞர்கள் அமைத்தனர்.

அவற்றில் பல பிரிவுகள் உண்டு. எனினும் இப்பிரிவினர் யாவரும் கடமையின்போது எப்படிப்பட்ட சட்டைகளைப் போட்டிருப்பர் என்று நாம் காணவில்லை.

இருப்பினும் புலிப்படையினர் எப்படிச் சட்டை போடுவார்கள் என்பதை அரசாங்கம் கண்டுபிடித்துவிட்டதாம்!

இதனுல் கடலில் திரிவோரும் கறுப்புச்சட்டையை உள்ளுக்கும் புலிச்சட்டையை வெளியிலும் போட்டுக்கொள்கின்றுர்கள் எனப் பேசப்படுகின்றது.

பசுத்தோலைப் புலி போர்க்கும்! இந்தப் புலித்தோலை இவர்கள் ஏன் போர்க்க வேண்டும்! மர்மம் எதுவோ?

நாம் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படவில்லை. எனவே அரசாங்கம் எமக்குத் தேசியச்சட்டை ஒன்று தர மாட்டாது.

எனவே இனியாவது நாம் எமக்குப் போடப்போகும் புதுச்சட்டையைப் பற்றித் தீர்மானிக்கவேண்டும்.

## சாரா வயதில் மூப்பு!

கடந்த வாரம் பிரிட்டிஷ் இளவரசர் அன்ட்ரூவை மணம் முடித்த சாரா அன்ட்ரூவை விட வயதில் மூத்தவராவார். சாரா 1959-ம் ஆண்டு பிறந்தவர். அவரின் வயது 27 ஆகும். ஆனுல் இளவரசர் அன்ட்ரூ 1960-ம் ஆண்டிலேயே பிறந்தார். அவர் வயது 26 ஆகும்.

இதேவேளை இவர்களின் திருமணத்துக்கு இரு முக்கிய அன்பர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் வேறு யாருமல்ல. சாராவின் முன்னுள் காதலர்களே அவ்விருவருமாவர்.

## 3 மணி நேரமே உறங்குவார்

அன்னை திரேசா அம்மையார் தூங்குவது மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே. தினசரி ஒரு மணிக்குத் தூங்கி நான்கு மணிக்கே விழித்துவிடுவார். மற்றைய நேரங்களில் அவர் தூங்குவதேயில்லை.

★

## அரச செலவில் 'மொட்டை'

ஆந்திரா அமைச்சரவை திருப்பதியில் இலவசமாக பக்தர்களுக்கு மொட்டையடித்து வருகிறது. இதனுல் தினசரி 12,000 பக்தர்கள் மொட்டையடித்துக் கொள்கிருர்கள். ஆனுல், மொட்டையடிப்பதனுல் சேரும் தலைமுடி கோயிலுக்குச் சொந்தமானது. இதனுல் கோயிலுக்கு 25 லட்ச ரூபாய் வருமானமாகக் கிடைக்கிறது.

—ஸச்சி.

## ● ராணி தலைமையில் ஒரு ராஜாங்கம்!

(முன் தொடர்ச்சி)

# பெட்டிகளில் தேனீ வளர்ப்பதால் பெருலாபமீட்டலாம்

தேன் வதையைக் கூட்டில்விட இனித் தயாராகுங்கள். தேனீக்களிடம் விஷம் உண்டு. இது பாம்பின் விஷத்துக்கு குறைந்தது அல்ல? அதனுல் இருபத்து ஐந்து தேனீச்கள் கடித்தால் மனிதன் இறந்துபோகநேரிடும். எனவே தேனீக்களைக் கூட்டில் விடும்போது கையுறையைப் பயன்படுத்துங்கள் கையில் தேனையும் தடவிக் கொள்ளுங்கள் தேனீ கடித்தால் மருந்து தேன் தான்! எனவே தேனைத் தடவிக்கொண்டால் விஷம் கட்டுப்படுத்தப்படும்.

தேன்கூட்டை வைக்கும்போது சிறிய தண்ணீர்த் தொட்டி ஒன்றை அமையுங்கள்! அதற்குள் நாலு பக்கமும் பலமான கம்புகள் அமைத்து அதிலேயே அந்தக் கூடு இருக்கக்கூடியதாகச் செய்யுங்கள் இதனுல் தேனீக்களின் எதிரிகள் கூட்டை அடைவது தடைசெய்யப்படும் தேன்கூட்டில் இரண்டு பெட்டிகள் உண்டு. அது ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கி வைக்கப்படும். முதலாவது பெட்டியில் ராணியும் தொழிலாளர்களும், ஆண் தேனீக்களும் வசிக்குமிடம். இங்குசாப்பாட்டிற்குத் தேவையான தேனும், மகரந்தப் பொடிகளும் தேனீக்களால் சேகரித்து வைக்கப்படும்!

இரண்டாவது பெட்டி மிகவும் முக்கியமானது. இது பெரும்பாலும் 6 பிறேம்களாகப்பிரிக்கப்படும். இந்தப்பிறேமில்தான் தேனீக்களின் வதைகள் தொங்கும். இங்கு மேலதிகமாகத் தேனீக்களால் தேன் சேகரித்து வைக்கப்படும்! இதுவே தேன்கூடு. இதற்கு மேலே கூரை இருக்கும் இரண்டாவது பெட்டியில் இந்தப் பிறேம்களில் வதைகளை விடும்போது தேனீக்கள் நாம் கொடுக்கும் நிரையை ஒழுங்கீனமாகவும் மாற்றலாம் எனவே வதையை நேராக்குவது அவசியம்.

### எப்படி நேராக்குவது?

தேன் வதையில் நேரே கையைக் கொண்டுபோய்த் தொடுவது ஆபத்தானது! அடங்காத மாட்டையும் நாணயக் கயிறு போட்டு அடக்கிவிடலாம். காட்டு யானையையும் பழக்கி அங்குசத்தால் அடக்கலாம்!

கொல்லவரும முதலையின் அடிவயிற்றில் தடவினுல் விட்டுவிட்டு ஓடிவிடும்! தேனீக்களையும் சற்று வதையைவிட்டு ஒதுங்கியிருக்கச் செய்ய ஒரு வழி உண்டு.

அதன்மீது வாயால் ஊதினுல் அது சற்று ஒதுங்கிவிடும். சுருட்டுப் புகையையும் இதற்குப் பயன்படுத்தலாம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வதையை நாம் நேராக்கலாம்.

பாம்பைத் தொந்தரவு செய்யாவிடில் அது விலகிப் போகும்! தேனீயும் பாம்பும் ஒரே வர்க்கம்.

அதனைத் தொந்தரவு செய்யாவிடின் அது எம்மைக் கொட்டாது.

### தேன் கூட்டின் அருகிலே......

தேன் கூட்டின் அருகிலே மின்சார 'பல்ப்' இருக்கக் கூடாது. அப்படி இருப்பின் அதிகமான தேனீக்கள் அதிலே விழுந்து இறந்துவிடும் எனவே வெளிச்சமில்லாத பகுதியில் தேன்கூட்டை வையுங்கள்.

6 பிறேம் கொண்ட பெட்டியில் தேனீ வளர்த்தால் ஒரு வருடம் 18 போத்தல் தேன் எடுக்கலாம். சுத்தமான தேன் ஒரு போத்தல் 100 ரூபா எனில் உங்களுக்கு மின்னுது, முழங்காது ரூபா 1800/- லாபம் வரும்.

காடுகளுக்கு அருகில் குடியிருப்போர் பல பெட்டிகளில் இதை வளர்க்கலாம். அதன் மூலம் ஆயிரக்கணக்கான ரூபாக்கள் லாபம் வரும். இன்று அரசாங்கம் தேனைக் கூட இறக்குமதி செய்கின்றது. மக்கள் சிந்திக்காது இருக்கும்வரை தேன்கூட இறக்குமதி செய்யப்படும்!

[அடுத்த இதழில் முடியும்]

இணுவையூர் முருகேசபிள்ளை

# ஒருதரம் நல்லூர்க் கந்தா ஓடிவந்து உதவும் ஐயா



அறுமுக வடிவினேடும் ஆறிரு கரங்களோடும்
பெருகிடும் கருணையோடும் பீடுடை மயிலினேடும்
இருதுணை வள்ளிதெய்வ யானையும் வேலும் கொண்டு
ஒருதரம் நல்லூர்க்கந்தா ஓடிவந் துதவும் ஐயா

கலியுக வரதன்நீயே கதியென நாங்கள் வந்தோம்
நலிவுகள் இங்கேமூடி நாம் படும் துன்பம் கோடி
தெளிவுற உன்னைத்தேடி சேர்ந்தனம் தமிழிற் பாடி
வழிவிட வேண்டும் நல்லூர் வளமுறு கந்தாவாநீ

உன்திருக் கோயில்முன்னே உருகிடும் உள்ளத்தோடு
தம் துயர் உரைக்கும்பக்தர் தலைமிசை கரங்கள் கூப்பி
எம்தமிழ் மக்கள்இங்கு இழந்தவை மீள்கவென்று
நம்பினர் நல்லூர்க்கந்தா நம்தமிழ் காக்க வாவா

பளிச்சிடும் உந்தன்சக்தி பரப்பிடும் வேலைக்கண்டு
ஒளித்திடும் சூரர்கூட்டம் ஒடுங்கிடும் கொட்டமெல்லாம்
விழித்திடும் தமிழர்கண்கள் விரும்பிடும் உரிமை காக்க
வெளிப்படு நல்லூர்வேலா விளம்பிட உலகிற்கெல்லாம்

அஞ்சிடும்போது உந்தன் அருட்திரு வடிவம் உள்ளே
நெஞ்சினில் இருத்திநின்று நினைப்பவர்க் கெல்லாம் தந்து
தஞ்சமும் தயையும் காட்டித் தணித்திடும் நல்லூர்க்கந்தா
வெஞ்சமர் அடங்கவீதி வெளியெலாம் வேலைநாட்டு

இலக்கியம் புராணமெல்லாம் எப்பவோ நீயும்வந்து
கலக்கமும் துயரும்போக்கிக் காத்தநற் கதைகள் சொல்வார்
விலக்கிட எங்கள்துன்பம் விரைவினில் வாராவிட்டால்
புலப்படு மாறுமுன்னர் புகன்றவை பொய்யாஐயா

—நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை.

# எய்ட்ஸ்

# நூற்றுண்டின் கொடியநோய்

கடந்த சில ஆண்டுகளாகவே 'அது' உலகை, குறிப்பாக அமெரிக்காவை உலுக்கி வருகிறது. சுமார் 11,000 பேரின் உயிரைக் குடித்துள்ளது. சுமார் 1 லட்சம் பேர் இதனுல் பீடிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. இது உலகில் மனிதசமுதாயம் உயிர் வாழவும் இனவிருத்தி செய்யவும் ஆதாரமானவை மூலமே பரவுகிறது.

81-ம் ஆண்டி நடுப்பகுதியில் கலிபோர்ணியா மாநில டாக்டர் ஒருவர் தன்னிடம் சில நோயாளிகள், அனைவரும் தன்னினச் சேர்க்கையில் நாட்டம் உடையோர், ஒரு அசாதாரண ஆனுல் கொடிய (P. C. P. எனப்படும்) நிமோனியாக் காய்ச்சலொன்றினுல் பீடிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களது உடலிலுள்ள இயற்கை நோய் எதிர்ப்புச் சக்தி முற்றுக அழிந்திருப்பதையும் அவதானித்தார்.



'எய்ட்ஸ்' நோயினுல் பாதிக்கப்பட்ட சிறுவன்

## அமெரிக்கா — ஐரோப்பா — தமிழ்நாடு.. .?

ஏறக்குறைய அதே நேரத்தில் நியூயோர்க் நகர வைத்திறர் ஒருவர் தன்னிடம் வந்த இளைஞன் ஒருவன், அவனும் தன்னினச்சேர்க்கையில் ஈடுபடுபவன், கபோஸியின் சார்க்கோமா (Kaposis, Sarcoma) எனப்படும் புற்றுநோயினுல் பீடிக்கப்பட்டிருந்ததுடன், அவனது நோய் எதிர்ப்புச்சக்தியும் அழிந்திருந்ததை அவதானித்தார். காபோஸியின் தார்க்கோமா சாதாரணமாக வயது சென்றவர்களையே தாக்குவதுண்டு. இவனது விஷயத்தில் பூமத்திய ரேகையை அண்டிய ஆபிரிக்க நாடுகளில் காணப்படுவது போன்று ஒரு அசாதாரண நிலையில் காணப்பட்டது.

இவ்வாறு பல நோயாளிகள் பெரும்பாலும் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுபவர் தமது நோய் எதிர்ப்புச் சக்தி அழிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, புதிய நோய் ஒன்று உருவாகியுள்ளதென்பதைப் புரிந்துகொண்ட அமெரிக்க தொற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிலையத்தினர் அதற்கு எய்ட்ஸ் (Acquired-Immune Deficiency Syndrome இயற்கை நோய் எதிர்ப்புச் சக்தி அழிந்துள்ள நோய்] எனப் பெயரிட்டனர்.

### எவ்வாறு பரவியது?

சரி, நோயைக் கண்டுபிடித்தாயிற்று; அது எவ்வாறு தோன்றியது அல்லது எவ்வாறு அமெரிக்காவினுள் புகுந்தது என்பது அமெரிக்க மருத்துவ நிபுணர்களுக்குப் புதிராகவிருந்தது.

மத்திய ஆபிரிக்காவில் முதலில் குரங்குகளிடையே தோன்றிய 'எய்ட்ஸ்' பின்னர் அங்குள்ளவர்களுக்கும், அங்கு வேலை செய்யும் ஹெய்த்தி தீவினர் மூலமாக ஹெய்த்தித் தீவுக்கும், அமெரிக்க உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கபுரியான ஹெய்த்தியிலிருந்து அவர்கள் மூலமாக அமெரிக்காவுக்கும் பரவியிருக்கலாமென ஒரு பிரிவினர் கருதுகின்றனர்; இதை மறுத்து வேறு ஆதாரங்களைக் காட்டுபவரும் உண்டு:

### நோய்க்காரணி

மருத்துவ ஆய்வுகளின்மூலம் 'எய்ட்ஸ்' நோய்க்காரணி ஒரு வைரசு எனக் கண்டுபிடித்த அமெரிக்க பிரெஞ்சு விஞ்ஞானிகள் அதனை HTLV-111,LAV என முறையே பெயரிட்டுள்ளனர்.

ஆயினும் இந்த HTLV/LAV வைரஸில் இருவகை உண்டு என்றே கருதவேண்டும் ஏனெனில் அமெரிக்காவில் 'எய்ட்ஸ்' அதிகமாக ஆண்களையே தாக்குகிறது. ஆனுல் ஆபிரிக்காவில் இருபாலாரையும் ஏறக்குறைய சமஅளவில் தாக்குகிறது.

தமிழ்நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள 6 நோயாளிகளும் பெண்களே!

### எதன்மூலம் பரவுகிறது?

'எய்ட்ஸ்' வைரஸ் பரவ ஏதுவான பொருள் ரத்தமாகும். அடுத்தது ஆண்களின்தாது பாய்பொருளாகும். 'எய்ட்ஸ்' நோயரும்புகாலம் சுமார் 2வருடங்களாகையால், இந்நோய் முற்றிவிட்டபின்னரே ஒருவர் தான் எய்ட்ஸால் பீடிக்கப் பட்டுள்ளதை அறிகிறுர்.

### எவ்வாறு தாக்குகிறது?

இந்த வைரஸ் ஒருவரின் உடலினுள் புகுந்தவுடன், அவரின் உடலினுள் புகும் நோய்க்கிருமிகளை எதிர்க்கும் வெண்குருதிக் குழியங்களை, குறிப்பாக P, C. P நிமோனியா, சிலவகைப் புற்றுநோய்கள் ஆகியவற்றிலிருந்து காப்பாற்றும் ஒரு உப தொகுதி வெண்குருதிக் குழியங்களைத் தாக்குகிறது. 'எய்ட்ஸ்' நிபுணர் ஒருவரின் கருத்துப்படி ஒருவரின் வெண்குருதிக் குழியங்களினுள் பிரவேசிக்கும்

இந்த வைரஸ் வெ. குழியத்தின் கருவிலுள்ள மூலப்பொருளினுள் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கிறது. அவரின் உடலினுள் வேறு நோய்க்கிருமிகள் புகுந்தவுடன் வெ. குழியங்கள் தமது பணியை ஆரம்பிக்கின்றன அல்லவா? அப்போது இத்த வைரஸ் அக்குழியத்தை அழித்துவிட்டு இன்னொரு வைரஸை உற்பத்தி செய்யும். புதிய வைரஸ் இன்னொரு குழியத்தினுள் புகுந்து அதனை அழித்துப் புதிய வைரஸை உருவாக்கும்.

மனிதனின் உடம்பினுள் சாதாரண கிருமிகள் இனவிருத்தி செய்வதைவிட சுமார் 1000 மடங்கு விரைவாக எய்ட்ஸ் இனவிருத்தி செய்வதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. வைரஸ் தாக்கியுள்ள ஒரு வெ. குழியத்தை, புதிய வைரசுகளை வேகமாக உற்பத்தி செய்யும் வண்ணம் ஒரு புரதப்பொருளை இந்த வைரஸிலுள்ள ஒரு தாதுப்பொருள் உருவாக்குவதாக ஒரு நிபுணர் குறிப்பிடுகிறுர்.



HTLV III வைரஸின் உருப்பெருத்த தோற்றம்

உண்மையில் இங்கு நடப்பதென்ன?

வெண்குருதிக் குழியங்கள் அழிந்துளிடுகின்றன. அத்துடன் கூடவே நோயெதிர்ப்பு சக்தியும் அழிகிறது.

முடிவு?

நோயெதிர்ப்புச் சக்தியற்ற மனிதன் எந்த ஒரு சாதாரண நோயினுல் பீடிக்கப்பட்டாலும் தாக்குப்பிடிக்கமுடியாமல் இறக்கிறுர்.

அதாவது ஒருவர் எய்ட்ஸால் இறப்பதில்லை. வேறு நோய்களால் இறக்கிறுர்.

ஆனுல் ஒரு மனிதன் 'எய்ட்ஸ்' இனுல் முழுமையாகத் தாக்கப்படக் கணிசமானவளவு வைரஸ் அவரது உடலில் புகவேண்டும்.

### ஊசிமூலம் போதைவஸ்து ஏற்றுபவருக்கு:

சிலர் ஊசிமூலம் தீமைமிக்க போதைவஸ்துப் பொருட்களை தம்முடலில் ஏற்றி 'இன்பம்' அனுபவிக்கின்றனர்.

இவ்வாறு, 'எய்ட்ஸ்' நோயாளி ஒருவர் ஊசிமூலம் போதை மருந்து ஏற்றும்போது அவருடலிலுள்ள சில வைரஸ்கள் ஊசியில் தொற்றிக்கொள்கின்றன. பின்னர் இன்னொருவர் அதனைப் பாவிக்கும்போது அக்கிருமிகள் மற்றவரினுடலில் பிரவேசித்து. நோயை உண்டாக்குகின்றன.

ஒருவர் பாவித்த ஊசியை கிருமிநீக்கம் செய்தபின் இன்னொருவர் உபயோகிப்பதன் மூலமோ, அல்லது அதனை உபயோகிக்காமல் விடுவதன் மூலமோ இவ்வாறு எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தவிர்க்கலாம்.

அதனைவிடச் சிறந்தவழி ஊசிமூலம் போதைமருந்து ஏற்றிக்கொள்ளாமல் இருப்பதே!

### ரத்த தானமூலம்

இன்று நாம் பல்வேறு காரணங்களுக்காக ரத்ததானம் பெறுகிறோம். சிலசமயங்களில் ஒருவர், பலரிடமிருந்து ரத்ததானம் பெறுகிறுர். இவ்வாறு ரத்ததானம் வழங்கும் பலரில் ஒருவரில் எய்ட்ஸ் நோய் காணப்பட்டால்...?...?

ஆயினும் இன்று பல நாடுகளில், ஒருவருக்கு ரத்தம் வழங்கப்படுமுன்னர், அவ்விரத்தம் எலிஸா (Eliza) சோதனைக்குட்படுத்தப்படுகிறது. இச்சோதனை அவ்விரத்தத்தில் 'எய்ட்ஸ்' வைரஸுக்கள் இருப்பின் தோன்றக்கூடிய பிறபொருளெதிரிகளை தெளிவாகக்காட்டும். அந்த பிறபொருளெதிரி இருப்பின் எய்ட்ஸ் வைரஸ் இருக்கிறது என அர்த்தம்.

எய்ட்ஸ் பரவக்கூடிய பிரதான வழிகள் இவையே. இவற்றைவிட மருத்துவர்களினுல் இதுவரை அறியப்படாத வேறுவழிகள் இருக்கலாம்; அல்லது புதிதாக பரவும் வழிகள் தோன்றலாம்.

எய்ட்ஸ் நோயாளியின் கண்ணீர், எச்சில் ஆகியவற்றில் எய்ட்ஸ் வைரஸுக்கள் மிகச் சிறிதளவில் காணப்படுகின்றன. இவற்றினுல் எய்ட்ஸ் இன்னொருவருக்கு நிச்சயமாகப்பரவாது.

எய்ட்ஸ் நோயாளிக்கு அருகில் இருப்பதால் இன்னொருவருக்கு எய்ட்ஸ் வராது.

### பெண்களின் பங்கு

அமெரிக்காவில் 'எய்ஸ்ட்' நோயாளிகளில் சுமார் 10% வீதத்தினரே பெண்களெனினும், ஆபிரிக்காவில் சமஅளவில் ஆண், பெண் இருபாலாரையும் பீடிக்கிறது,

அமெரிக்காவில்கூட பெண் எய்ட்ஸ் காவிகளாக உள்ளனர். ஆணின் உடலிலிருந்து பெண்ணுக்கும், பெண்ணிலிருந்து இன்னொரு ஆணுக்கும் எய்ட்ஸ் வைரஸுக்கள் போவது சாத்தியமே.

(8-ம் பக்கம் பார்க்க)

இ. செந்தில்

---

றெஹல்ட் டீவர்: 22 வயது நிரம்பிய சலவைத் தொழிலாளி. நியூயோர்க் நகரில் அறையொன்றில் தனது நண்பரான 52 வயது நிரம்பிய ஒருவருடன் தங்கியிருந்தான்.

கடந்த சில மாதங்களுக்கு முன், மூச்சிரைப்புடன் களைப்பும் அடிக்கடி காய்ச்சலும் அவனுக்கு வந்து கொண்டிருந்தபோது ஏதோ சாதாரண நோயே தனக்குப் பீடித்துள்ளது என நினைத்தான்.

ஆனுல் பின்னர் இரவு நேரங்களில் தனக்கு அதிகமாக வியர்த்துக்கொட்ட ஆரம்பித்ததையடுத்து அவனுக்கு பயம் பீடித்தது.

ஏனெனில்......

தற்போது உலகை உலுக்கிவரும் 'எய்ட்ஸ்' நோயின் பொதுவான அறிகுறிகளே இவை!!

இருவாரங்களின் பின்னர் டீவர் ஒரு வைத்தியரிடம் சென்று தனக்குள்ள வியாதியைக் கூறினுன்.

தனக்கு 'எய்ட்ஸ்' இல்லை என் வைத்தியர் கூறுவாரென எதிர்பார்த்தான். 'எய்ட்ஸ்' தம்மைப் பீடித்துள்ளதென அறிய யார் தான் விரும்புவார்?

ஆனுல்......

22 வயதுடைய றெஹல்ட் டீவர் 'எய்ட்ஸ்' சினுல் பீடிக்கப்பட்டுள்ளதை வைத்தியர் ஊர்ஜிதப்படுத்தினுர்.

டீவர் இப்போது கவனிக்க யாருமற்ற நிலையில் தங்குவதற்கு சரியான இடமில்லாமல், வேலையில்லாமல், சரியான உணவில்லாமல் தனிஅறையொன்றில் மரணத்தை காத்திருக்கிறுன்.

---

## 'எய்ட்ஸ்' வருமுன் காப்போம்

பொல்லாத நோயுள் ஒன்றும்
பொருந்திய எய்ட்ஸ் தன்னுலே
கல்லாத மாந்தர் அன்றிக்
கற்றவர் தாமும் மாய்வர்
இல்லாத துன்பம் உற்றே
இறப்பினை அடைவர் அந்தோ
அல்லாத பழக்கம் தன்னுல்
அழிவது திண்ணம் அன்றே

புலன்வழிச் சேட்டை தன்னைப்
பொருந்திய அறிவாற் கட்டி
நலன்வழி மனதை என்றும்
நன்மையாம் மார்க்கம் தன்னில்
பலன்பட நடத்திச் சென்றுல்
பக்குவ வாழ்வு உண்டாம்
நிலன்மிசை வாழ்வு என்றும்
நிச்சயம் சிறக்கும் காண்பீர்

இயற்கையின் வழியில் சென்றே
இணைவிழைச் சின்பம் பேணின்
செயற்கையின் செறிவு இன்றும்
சேமமும் மிக்க உண்டாம்
முயக்கமாம் இருவர் இன்பம்
முறையிலா தமைந்த போழ்து
இயக்கமாம் வாழ்வு கெட்டே
இன்னலாய் முடியும் அந்தோ

வருமுன்னர்க் காவான் வாழ்க்கை
வைக்கலின் முன்னே வைக்கும்
பெருநெருப் பென்பர் மேலோர்
பெண்ணெடு ஆண்கள் எல்லாம்
கருவுயிர்ப் பொன்றை எண்ணி
கண்ணிய வாழ்வு கண்டால்
திருவுடைச் செல்வர் ஆவார்
தீயநோய் பெறவேமாட்டார்

முருகவே. பரமநாதன்

---

## 'எய்ட்ஸ்' மொழிகள்....

எய்ட்ஸ் அற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
எய்ட்ஸைக் கண்டால் எட்டி விலகு.
எய்ட்ஸ் புகுந்த வீடும்
எமன் புகுந்த வீடும் ஒன்று.
எய்ட்ஸ் உள்ளார்க்கு இவ்வுலகில்லை
தேனும் பேட்டையில் எய்ட்ஸ் வந்தால்
பறங்கி மலையில் பயம் வருமாம்.

பலநாள் எய்ட்ஸ் ஒருநாள் தெரியும்!

## 'எய்ட்ஸ்' குறள்கள்

எந்நோய் வந்தார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
எய்ட்ஸ் நோய் வந்தார்க்கு.

எந்நோய் யார் யார் சொல் கேட்பினும்; அந்நோய்
எய்ட்ஸ் நோய் காண்பதறிவு.

அல்சர் கொடிது கான்சர் கொடிது என்பர் அவர்
எய்ட்ஸ் பற்றிக் கேளாதவர்.

எய்ட்ஸ் நோய் வந்தும் அஞ்சான் அவனை
எவரும் வெல்லல் அரிது.

எய்ட்ஸ் இன்றி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
எமனேடு பின் செல்பவர்.

த. சத்தியநாராயணன்
அயன்புரம்.

# கபில்தேவின் முதல் வெற்றி

வதிரியூர் இ. சிவசங்கர்

அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான ரெஸ்ட் போட்டிகள் மூன்றிலும் முதல் இரண்டு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்றதும், மூன்றாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தமையும் யாவரும் அறிந்ததே.

இப்போட்டியில் இந்திய அணியின் சிறப்பு என்னவெனில், இந்திய அணியின் தற்போதைய அணித்தலைவரான கபில்தேவ் இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் தனது முதல் ரெஸ்ட் வெற்றியையும், அடுத்து லீட்ஸ் மைதானத்தில் இரண்டாவது ரெஸ்ட் வெற்றியையும் பெற்றதாகும். 15 ஆண்டு கால இடைவெளியின்பின் இங்கிலாந்து அணியை அவர்களது சொந்த மண்ணில் வைத்துக் கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் இறுதியாக 1971ம் ஆண்டிலேயே இந்திய அணி இங்கிலாந்து அணியை அவர்களுடைய சொந்த மண்ணில் வைத்து வெற்றிகொண்டது.

இன்றைய கிரிக்கட் உலகின் சகலதுறை ஆட்டக்காரருள் முதலானவராகத் திகழும் கபில்தேவ் தனது 15-வது வயதில் கிரிக்கட் வாழ்க்கையில் பிரவேசித்துப் படிப்படியாக உயர்ந்து ரெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தைப்பெற்று இந்திய அணிக்குத் தலைவராக்கப்பட்டிருக்கின்றார். எனினும் கபில்தேவ் இதுவரை 20க்கு மேற்பட்ட ரெஸ்ட்போட்டிகளில் தலைமை வகித்திருந்தும் இதுவரை காலமும் தனது வெற்றியைப் பெறும் அதிர்ஷ்டம் அற்றவராகவே இருந்து வந்தார். இது குறித்து அவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூடுதலாக நடுவர்களையே குறைகூறி வந்திருக்கிறார். 1985—86 தொடரில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டிகளில் இரண்டு போட்டிகளில் தனது அணி வெற்றிபெறும் வாய்ப்பு இருந்துங்கூட அங்கு நடுவர்களும் மழையும் சேர்ந்து தனது வெற்றிக்கெதிராக விளையாடி விட்டார்கள் என்று கூறியிருந்தார்.

எது எப்படியிருப்பினும் இங்கிலாந்தில் லோட்ஸ் மைதானத்திலும், தொடர்ந்து லீட்ஸ் மைதானத்திலும் நடைபெற்று முடிந்த போட்டிகளில் அவரது சரித்திர வெற்றி உறுதியாகிவிட்டது. இதுவரை காலமும் இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற 75 ரெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணி 30 போட்டிகளிலும், இந்திய அணி 11 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 34 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

### லோட்ஸில் வெங்சார்கரின் சாதனை:

இப்போட்டித் தொடரில் இந்திய அணி சார்பில் சிறப்பாகவும், திறமையாகவும் ஆடியவர் இந்திய அணியின் அனுபவம் வாய்ந்த ஆட்டக்காரரான டிலிப் வெங்சார்கர் ஆவார். ஏற்கனவே 1 நாள் போட்டிகளில் இந்திய அணியில் அதிகூடிய ஓட்டங்களாக 2000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த வெங்சார்கர் அண்மைக் காலங்களில் ரெஸ்ட் போட்டிகளிலும் மிகத் திறமையாகக் காலூன்றத் தொடங்கிவிட்டார். இந்திய அணி வெற்றிபெற்ற இரு போட்டிகளிலுமே ஆட்டமிழக்காது செஞ்சரி அடித்து சாதனைபுரிந்தார். அத்துடன் லோட்ஸ் மைதானத்தில் தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் தொடர்ச்சியாக மூன்று செஞ்சரிகள் அடித்த ஒரேயொரு பிறநாட்டவர் என்ற பெருமையையும் தட்டிக்கொண்டார். இதற்குமுன் இம்மைதானத்தில் தொடர்ச்சியாக மூன்று செஞ்சரிகள் அடித்த ஏனைய ஐவரும் இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த ஆட்டக்காரர்களாவார்கள்.

### சாதனை மன்னன் சுனில் கவாஸ்கர்

இந்திய அணி சார்பில் சாதனைமேல் சாதனை குவிக்கும் முன்னாள் தலைவரான சுனில் கவாஸ்கர் இப்போட்டித் தொடரில் குறிப்பிட்டுக் கூறக் கூடியதாக ஒன்றும் செய்யாவிடினும் அவரது சாதனைப் பட்டியலில் மேலும் இரு சாதனைகள் சேர்க்கப்பட்டுவிட்டன. முதலாவதாக உலகிலேயே கூடுதலான ரெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர் என்ற பெருமையைத் தட்டிக்கொண்டார்.

எட்பாஸ்ரரில் நடைபெற்ற இறுதி ரெஸ்ட் போட்டியில் விளையாடியதுடன் கவாஸ்கர் இதுவரை 115 ரெஸ்ட்போட்டிகளில் விளையாடி இதற்கு முன்னர் அதிகூடிய ரெஸ்ட் போட்டிகளாக 114 போட்டிகளில் விளையாடிய இங்கிலாந்து அணியின் முன்னாள் ஆட்டக்காரரான கோலின் கௌட்ரியின் சாதனையை முறியடித்துவிட்டார். அத்துடன் இப்போட்டியில் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரான டேவிட் கவரைக் காச் பிடித்து ஆட்டமிழக்கச் செய்ததுடன் தனது ரெஸ்ட் கிரிக்கட் வாழ்க்கையின் 100-வது காச்சைப் பிடித்து காச் பிடிப்பதிலும் ஒரு சாதனையை ஏற்படுத்திக் கொண்டார்.

### 1-வது போட்டி:

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 1-வது போட்டியில் இந்திய அணி மிகவும் சிறப்பாக ஆடி வெற்றியைத் தன்பக்கம் எடுத்துக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 1-வது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி சார்பில் ஷேட்டன் ஷர்மா மிகவும் சிறப்பாகப் பந்துவீசி ஐந்து விக்கெட்டுக்களையும் சரித்தார்.

அடுத்து ஆடிய இந்திய அணி டிலீப் வெங்சார்க்கரின் சிறந்த ஆட்டத்தின் மூலமும் மொகிந்தர் அமர்நாத்தின் பொறுமையான ஆட்டத்தின் மூலமும் தனது முதல் இனிங்ஸ் எண்ணிக்கையாக 341 ஓட்டங்கள் என்ற இலக்கை அடைந்தது. டிலீப் வெங்சார்க்கர் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காது 126 ஓட்டங்களைப் பெற்றார். இரண்டாவது இனிங்ஸ் இங்கிலாந்து அணி மோசமாக ஆடி குறைந்தளவு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதன் பின்பு ஆடிய இந்திய அணி வெற்றிபெறுவதற்கு மிகவும் குறைந்தளவு ஓட்டங்களே எடுக்கவேண்டிய நிலையில் மிகவும் சிறப்பாக ஆடி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றனர். இப்போட்டியில் வெற்றிபெறுவதற்குரிய இறுதி ஓட்டங்களை கபில்தேவ் சிக்ஸர் அடித்ததன் மூலம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி முடிவில் முறையே 126, 34 ஓட்டங்களைப் பெற்ற டிலீப் வெங்சர்க்கர் சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### 2-வது போட்டி:

இரண்டாவது போட்டி லீட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது. இப்போட்டியில் இங்கிலாந்து அணி அதன் புதிய தலைவரான மைக்கறிங்கின் தலைமையின் கீழ் ஆடத் தயாரானது. எனினும் லீட்ஸ் மைதான ஆடுகளம் துடுப்பெடுத்தாட்ட வீரர்களுக்குச் சாதகமாக அமையவில்லை. இதன் விளைவாக இந்திய அணியினாலோ இங்கிலாந்து அணியினாலோ அதிகளவு ஓட்டங்களைப் பெற முடியவில்லை. எனினும் இந்திய அணி சார்பில் டிலீப் வெங்சார்க்கர் இந்தப் போட்டியிலும் மிகச்சிறப்பாகவும், பொறுப்புணர்ச்சியுடனும் விளையாடி ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களைப் எடுத்தார். இப்போட்டியில் இந்திய அணியின் தலைவரான கபில்தேவ் மிகவும் வேகமாக ஆடி 20 பந்து வீச்சுக்களை மட்டுமே சந்தித்து 31 ஓட்டங்களை மின்னல் வேகத்தில் அடித்துக் குவித்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக இந்திய அணி இப்போட்டியில் 200 க்கு மேற்பட்ட ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இப்போட்டித் தொடரையும் வென்றுகொண்டது.

### 3-வது இறுதிப் போட்டி:

முதல் இரண்டு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்று இப்போட்டித் தொடரில் வெற்றி பெற்றமையால் இறுதிப்போட்டி விறுவிறுப்பற்ற நிலையில் பேர்மிங்காமில் உள்ள எட்பாஸ்ரர் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியிலும் இங்கிலாந்து அணியே முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டது. இங்கிலாந்து அணியின் புதிய அணித்தலைவரான மைக்கறிங் மிகவும் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காது 183 ஓட்டங்களை எடுத்து இங்கிலாந்து அணி ஒரு பெரிய ஓட்ட எண்ணிக்கையாக 390 ஓட்டங்களை எடுக்க உதவினார்.

இப்போட்டியின் 1-வது இனிங்சில் இந்திய அணியினரும் 390 ஓட்டங்களையே எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது! இப்போட்டியில் இந்திய அணி சார்பில் மொகிந்தர் அமரநாத் 79 ஓட்டங்களையும், முகமட் அஸாருதீன் 64 ஓட்டங்களையும் பெற்றனர். இங்கு பெறப்பட்ட 64 ஓட்டங்களுடன் அஸாருதீன் தனது டெஸ்ட் வாழ்க்கையின் 4-வது அரை செஞ்சரியை எட்டிப்பிடித்திருக்கின்றார். ஏற்கனவே இவரால் அடிக்கப்பட்ட மூன்று செஞ்சரிகளும் இந்தியாவில் வைத்து இங்கிலாந்து அணிக்கெதிராக அடுத்தடுத்த மூன்று ரெஸ்ட் போட்டிகளில் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது இனிங்சில் இங்கிலாந்து அணியினர் 235 ஓட்டங்களுக்குச் சகல விக்கட்டுகளையும் இழந்தனர். அடுத்து விளையாடத் தொடங்கிய இந்திய அணி சுனில் கவாஸ்கரின் திறமையான ஆட்டத்தின் மூலம் ஐந்து விக்கட்டுகள் இழப்புக்கு 174 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டமையால் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது இப்போட்டியில் இந்திய அணி சார்பில் கொன்மூரே ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும், முகமட் அஸாருதீன் 29 ஓட்டங்களையும், கவாஸ்கர் மிகவும் திறமையாக ஆடி 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

2—0 என்ற ரீதியில் இந்திய அணி இப்போட்டித் தொடரில் வெற்றிபெற்று கிரிக்கட் உலகின் நீண்ட கால இடைவெளிக்குப்பின் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியது. அத்துடன் இந்திய அணிக்குத் தலைமை வகித்தவர்களில் வயதில் மிகக் குறைந்தவரான கபில்தேவ் இந்த இமய சாதனையை நிலைநாட்டியதை இட்டு உலகெங்கும் வாழும் கிரிக்கட் ரசிகர்கள் அவரைப் பாராட்டினர்!



## பொன்னேட்டில் பெயர் பொறித்தான்

காலொன்றில் தளராது நின்றான் மற்றும்
கலங்காது நெடுந்தூரம் நடத்தல் செய்தான்
நாளொன்றே பலவாக ஓய்வே இன்றி
நடனத்தைச் செய்திட்டான் சலித்திடாதே
கோலொன்றை விரல் நுனியில் வைத்தே தூக்கும்
சாதனை செய்தான் சயிககிள் தன்னில் மற்றும்
நாளெல்லாம் தொடர்பயணம் செய்தான் ' கின்னர்ஸ்''
பொன்னேட்டில் தன்பெயரைப் பொறித்துக் கொண்டான்

ஆழியின் அருகமைந்த அணிநகர் வல்வை தன்னை
ஆறுமுன் றசவையிலே அகிலமே அறியும் வண்ணம்
ஆழியில் நீந்தலைத் தனது அன்னையாம் வல்வை மண்ணில்
அருந்தமிழர் அன்னைமண்ணை இருதினந் தன்னில் தொட்டு
ஆழிசூள் உலகம் மகிழ அரும்பெரும் புகழை உற்றான்
'ஆழிக்குமரன்' என்றே பே ரன்போ டழைக்கப் பெற்றான்
ஆழியின் மகளாம் அந்த ஆங்கிலக்கால்வாய் தன்னில்
அறபுதம் செய்யும்போது நற்பதம் அடைந்திட்டானே.

கனக. மனோகரன்

# பல்துறை அறிஞர் சண்முகசுந்தரம்

நாடகம் பலவும் நல்கிய
கலைஞன்
கதையும் நாவலும் ஆக்கிய
வல்லோன்
அறிஞரின் வாழ்வைக்
கலைஞரின் வாழ்வை
அழகுறக் காட்டும் எழிலுறுங்
குணத்தன்
நாடு வேண்டும் கலைப்பணி
யாவும்
பீடுறப் புரியும் பெருந்தகை
யாளன்
சிந்தனை கற்பனை கொண்டே
விளங்குஞ்
சண்முகசுந்தரம் என்னும்
ஆசான்.

இவ்வண்ணம் கவிஞர் ஒருவர் தமிழ்த்திரு த. சண்முகசுந்தரம் அவர்களை அழகுறப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

கலை, இலக்கிய உலகில் திரு த. சண்முகசுந்தரம் 'தசம்' எனச் செல்லமாக அழைக்கப்படுகின்றார். இவரைக் கலை, இலக்கிய உலகு நாவலாசிரியர், நாடகவாசிரியர், கதாசிரியர், கட்டுரையாளர், ஆய்வாளர், விமர்சகர், பேச்சாளர், தமிழ் ஆர்வலர் என்றெல்லாம் அணிகலன்களால் அலங்கரித்து-அழகுபடுத்திப் பேசுகின்றது. தசம் இவ்வடைமொழிகள் அனைத்தையும் அலங்கரிப்பவர் தான். இருந்தும் இவர் 'மக்கள் கலைபேரார்வலன்' ஆகத்திகழ்ந்து. அதனை ஊக்குவிப்பதையே உயிர்மூச்சாகக் கொண்டவர் என்பது எனது தாழ்மையான துணிவு.

'தகவம்' நிறுவனத்தை சமூகப் பயனுள்ள இலக்கிய அமைப்பாக்கும் நல்லெண்ணத்தில், ஆசிரியரை தகவத்தில் உறுப்பினராக சேரும் வண்ணம் வேண்டினேன் 'சரி', என்றார். நானே அவர் சார்பில் உறுப்புரிமை விண்ணப்பத்தையும் தயாரித்து, ஒப்புதலின் அடையாளமாக அவரின் ஒப்பத்தினைப் பெற்றேன். அவர் இலக்கிய ஊக்குவிப்புக்கெனவே தகவத்தில் சேர்ந்தார்; தகவத்தின் மேம்பாட்டினுக்காகவே சதா உழைத்தார்; தகவத்தை வளர்த்த பங்காளருள் அவரும் ஒருவர்.

இவரின் உதவியால், ஊக்குவிப்பால் என்னைப்போன்று எத்தனையோ எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர். திருவாளர்கள் ஆசிச்செல்வன், கலாநிதி பொ. இரகுபதி, க. நகுலேஸ்வரன், புலவர் ம. பார்வதி நாதசிவம், மயிலங்கூடலூர் நடராசன், என். சண்முகலிங்கள், எம். சண்முகலிங்கம், வேல்அமிர்தன், கோகிலா மகேந்திரன் முதலியோர் இவரால் உருவான எழுத்தாளருள் ஒருசிலர். இவரின் வியர்வையால் வேகம் பெற்ற இலக்கிய அமைப்புக்கள் பல. அவற்றுள் முக்கியமான ஒன்று 'தகவம்'. தசத்தின் செயலூக்கத்தால் மலர்ந்த இலக்கிய முயறசிகள் பல. இவரின் எழுத்தாற்றலால் இலக்கியத்திறனால் 1962-இல் இவர் எழுதி இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற 'வாழ்வு பெற்ற வல்லி' மாருதப்புரவல்லி நாடக நூல் முதற்கொண்டு நாடகம், நாவல், கலை, மக்கள் கலை சைவம், வாழ்க்கை வரலாறு ஆகிய துறைகள் சார்ந்த 24 நூல்கள் வெளியாகியுள்ளன இவர் ஒன்றிணைந்து கூட்டாகவும் சில நூல்களை எழுதியுள்ளார். இவரின் அச்சுவாகனம் ஏறாத ஆக்கங்கள் ஏராளம். ஒரு தடவைக்குமேல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற இலக்கியவாதிகள் ஒரு சிலரே. அவர்களுக்குள் இவரும் ஒருவர்.

வேல் அமிர்தன்

தசத்தின் எழுத்தில் ஒரு தனித்துவம் உண்டு யாழ்ப்பாணத் தமிழின் நறுமணம் உண்டு; மண்வாசனை உண்டு; தனித் தமிழின் வண்ணத் தமிழின் வடிவலங்காரம் உண்டு: எல்லாவற்றுக்கும் மேலாக, வாசகரை அழைத்துச் செல்லும் வல்லமை உண்டு.

தசம் அவர்களின் 'கலையருவி கணபதிப்பிள்ளை' என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி க. கைலாசபதி அவர்கள், நன் மாணாக்கனது குருபக்தி, கலாசிரியனது விவரணத்திறன், நாடகாசிரியனது பாத்திர வார்ப்பாற்றல், பத்திரிகையாளனது நுணுக்க விவர அக்கறை, சமூக சீர்திருத்தவாதியின் கொள்கைப் பற்று, பண்பாளனது பணிவடக்கம், வரலாற்று மாணவனது கால உணர்வு இத்தியாதி பண்புகள் ஒன்றிணைந்து இவ்வாழ்க்கைச் சரித நூலுக்கு முழுமை அளிக்கின்றன'' என வியந்துரைத்துள்ளார்


# பாலசுந்தரத்தின் ‘அந்நிய விருந்தாளி’

● பேராசிரியர் சு. வித்தியானந்தன்

கல்வி, இலக்கியம் என்பன ஒன்றோடொன்று மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்ட துறைகளாகும். கல்வி அறிவுக்கண்ணைத் திறப்பது; இலக்கியம் உள்ளத்தைப் பண்படுத்துவது, இரண்டுமே மனித வாழ்க்கையை முழுமைப்படுத்தும் நோக்கங் கொண்டவை இவ்விரண்டுக்குமுள்ள நெருங்கியஉறவு காரணமாகக் கல்வியாளருட்பலர் இலக்கியத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருக்கும் நிலையை அவதானிக்கலாம் குறிப்பாக ஈழத்து இலக்கியப்பரப்பை நோக்கும்போது இலக்கியப் படைப்பாளிகளுட் குறிப்பிடத்தக்க தொகையினர் கல்விப் பணியுடன் தொடர்புகொண்டவர்களாகத் திகழ்வதை அவதானிக்க முடியும். இத்தகையோரில் ஒருவரே திரு. க. பாலசுந்தரம் அவர்கள். ஒரு கல்வியாளர் என்ற வகையிலே தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அதிபராகப் பணிபுரியும் அவர்கள், நவீன இலக்கியத்துறைகளிலொன்ருன சிறுகதைத்துறையிலும் தனிக் கவனம் செலுத்தி வருகின்ருர். பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் படைத்த பத்துச் சிறுகதைகள் அந்நிய விருந்தாளி என்ற தலைப்பிலான இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

க. பாலசுந்தரம் அவர்கள் அறுபதுகளின் நடுப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்பயின்று பட்டம் பெற்றவர். அங்கு அவர் பயின்ற காலப்பகுதியிலே தமது நவீன இலக்கிய ஈடுபாட்டைப் பல வழிகளிலும் புலப்படுத்தி நின்றவர். அக்காலப் பகுதியிலே பல்கலைக் கழகச் சூழலைக் களமாகக் கொண்டு ஒரு புதிய நவீன இலக்கிய சிந்தனை உருவாகியது. அச்சிந்தனை உருவாக்கத்திற் க. பாலசுந்தரம் அவர்களுக்கும் பங்கு உண்டு. பல்கலைக் கழக வாழ்க்கைக்குப் பின் சிறுகதைப் படைப்பு முயற்சியிலே தனிக் கவனம் செலுத்தினர். எழுபதுகளின் ஆரம்பத்திலே பல சிறுகதைகளை எழுதினர். அவை சிரித்திரன், ரோசாப்பூ முதலிய சஞ்சிகைகளிற் பிரசுரமாயின. பின்னர் பத்தாண்டுகட்கு மேலாக இலக்கியப் படைப்பிலிருந்து தற்காலிகமாக விலகி நின்ற அவர் அண்மையில் மீண்டும் தீவிரமாக இலக்கியப் படைப்பில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். அவ்வீடுபாட்டின் விளைவாகவே இச் சிறுகதைத் தொகுதி அமைந்துள்ளது. இதிலே அவர் பதினைந்கு ஆண்டுகட்கு முன் எழுதிய எட்டுக் கதைகளும், இந்த ஆண்டுத் தொடக்கத்தில் எழுதிய இரு கதைகளும் இடம் பெற்றுள்ளன.

இத்தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகளில் ''மனித தெய்வம்'', ''அந்நிய விருந்தாளி'' என்னும் தலைப்பில் அமைந்த இரண்டும் மனித சமுதாயம் முழுமைக்கும் பொதுவான மனிதநேயம் என்னும் பண்பினை வெளிப்படுத்துவன. ஏனைய கதைகள் ஈழத்தமிழர் சமூகத்திற்குச் சிறப்பாகவுள்ள சமூக-பொருளாதார பிரச்னைகளினடிப்படையில் உருவானவை. 'மனித தெய்வம்' கதை, படிக்காத கிராமப் புறத்தான் ஒருவனிடம் உள்ளிருந்த 'பகைவனுக்கு அருளும்' உயர்பண்பைப் புலப்படுத்துகிறது. ''அந்நிய விருந்தாளி'' கதையிலே தன் கிராமத்திற்குப் பணிசெய்ய வந்த பிற இனத்தவன் ஒருவனை ஆபத்திலிருந்து உயிர்காத்த ஒருசமூகத்தின் உயர்ந்த பண்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவ்விரு கதைகளும் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு வெளியே ஆசிரியப்பணி புரியும் யாழ்ப்பாணத்தவரின் கண்ணோட்டத்தில் அமைந்துள்ளன. ''முட்டைப் பொரியலும் முழங்கையும்'' என்ற கதை கடந்த பதினைந்தாண்டுகளாக இலங்கையில் பல்கலைக் கழகப் பிரவேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'தரப்படுத்தல்' என்ற முறைமையின் 'நீதியற்ற' செயற்பாட்டை உட்பொருளாகக் கொண்டது. 'ஸ்கூல் பிளஸ் மினிபஸ் ரைம்ரேபிள்கள்' என்ற கதை இன்றைய இனப்பிரச்னைச் சூழ்நிலையிலே பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பும் பெற்ருேரின் மனோநிலையில் நிகழும் தாக்கங்களை உணர்த்துவது. 'யார் பெற்ற பிள்ளையோ?' என்ற கதை தனியார் போதனு நிலையங்கட்குக் கல்வி கற்கச் செல்லும் மாணவருட் சிலரின் ஒழுக்கக் குறைபாடுகளைச் சுட்டியுணர்த்துவது. 'மூன்று பரப்பு முக்கால் குழிகள்' என்ற கதை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிலவும் நிலப்பற்ருக் குறையையும் அதனுல் ஏற்படும் போட்டி, பொருமை பூசல்களையும் பொருளாகக் கொண்டது. ஏனைய கதைகள் பொதுவாக யாழ்ப்பாணச் சமூகத்திற் கல்யாணப் பிரச்னையை அடிப்படையாகக் கொண்டவை 'உத்தியோக மாப்பிள்ளை'யை எடுப்பதற்காகப் பெண்களைப் பெற்ற பெற்ருேர் போடும் வேடங்களைக் 'கண்டறியாத கல்யாணக்கதை' காட்டுகிறது உத்தியோக மாப்பிள்ளைக்காகத் தவமிருந்து முதுகன்னியான பின் தோல்வி கண்ட பெண்களை 'விழிப்பு' என்ற கதை காட்டி நிற்கிறது. தம்பியின் உழைப்பைச் சுரண்டும் நோக்கில் அவனது திருமணத்தைச் 'சாதக பலனை'க் காட்டித் தள்ளிப்போடும் சுயநல அண்ணன் அண்ணிகளை 'ஏழிற் செவ்வாய்'க் கதையிற் காணலாம் மிகப்பெரும் சீதனம் கொடுத்தாற் படித்த மாப்பிள்ளைகளை எடுத்துவிடலாம் என்ற மனப்பால் குடிக்கும் படிப்பற்ற புதுப்பணக்கார மனோபாவத்தை 'உயர உயரும் அன்ரனுக்கள்' கதை காட்டி நிற்கின்றது.



கதைகளை அமைக்கும் முறையிலே வெவ்வேறுவகை உத்திகளை ஆசிரியர் கையாண்டுள்ளார். பெரும்பாலும் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு உத்தியில் அமைந்துள்ளது. பாத்திரங்களின் உரையாடலோடு கதையை நடத்திச் செல்லும் பண்பும், பாத்திரங்களின் உணர்வோட்டங்களினூடாகக் கதை கூறும் பண்பும் ஆசிரியருக்குக் கைவந்த கலையாகவுள்ளமையை அவதானிக்க முடிகிறது. பொதுவாக இக்கதைகள் முழுவதையும் தொகுத்து நோக்கும்போது பாலசுந்தரம் அவர்களால் ஈழத்துச் சிறுகதைத் துறையிலேயே புதிய வளர்ச்சி நிலைகளைப் புலப்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை ஏற்படுத்துகின்றது.

# நோய் நீக்கும் மூலிகைகள்

வெளியீடு: மூலிகை மருத்துவ ஆராய்ச்சிச் சபை, புங்குடுதிவு

ஆரோக்கியமற்ற ஒரு சமூகத்தால் ஒரு புதிய சமுதாயத்தைப் படைத்திடமுடியாது என்ற பெருநோக்கில் ஒரு நூல் மலர்ந்திருக்கின்றது. அந்த நூலை வீ. த. துரைசிங்கமும், வீ. த. இளங்கோவனும் இணைந்துஎழுதியிருக்கிருர்கள். 'நோய் நீக்கும் மூலிகைகள்' என்ற இந்த நூல் ஒரு குடும்பக் கைநூலாக இருக்கவேண்டியது.

அன்ருட வாழ்க்கையில் நாம் எத்தனையோ நோய்தீர்க்கும் மூலிகைகளைக் காணுகின்ருேம் ஆனுல் பயன்படுத்தத் தெரியாமல் விட்டுவிடுகின்ருேம் இந்த நூலை வாசித்தால் நம் அலட்சியம் செய்யும் மூலிகைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

'வானத்தில் அகத்திய முனிவரின் நட்சத்திரம் தோன்றும் காலகட்டத்தில் அகத்தி மரம் பூக்கும்: இந்நூலின் முதல் வசனம் இது. இவ்வாறு சுவாரஸ்யமான விஷயங்களை மாத்திரமன்றி ஒவ்வொரு மரங்களிலும் எத்தகைய மூலிகள் அடங்கியிருக்கின்றன என்பதையும் எவ்வாறு அதனைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் அடங்கியிருக்கின்றன. அகத்தி தூதுவளை. பப்பாளி. ஆடாதோடை, வேம்பு, மருதோன்றி, சோற்றுக்கற்ருழை, வல்லாரை, துளசி, ஆடுதீண்டாப்பாளை ஆகியனவற்றின் மகத்துவங்கள் இந்த நூலில் இடம் பெற்று உள்ளன.

மூலிகை மருத்துவ ஆராய்ச்சிச் சபை ''சிகரம்'' புங்குடுதீவு-3 இந்த நூலை வெளியிட்டுள்ளது.

## மூலிகை-2

[மருத்துவ ஏடு]

மூலிகை மருத்துவத்தில் புதிய சாதனைகளைப் படைக்கும் நோக்கத்துடன் மூலிகை என்ற சஞ்சிகை வெளிவந்துள்ளது. எதற்கு எல்லாம் ஆங்கில மருந்துகளைத் தேடும் எம்மவர்க்கு இச்சஞ்சிகை புதிய கருத்துக்களைத் தரும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் வி. ரி. இளங்கோவனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இந்தச் சஞ்சிகை ஒவ்வொரு வீட்டிலும் இருக்குமாயின் ஆரோக்கியம் படிமுறை வளர்ச்சி காணும் என்பதில் ஐயம் இல்லை.

இந்த இதழில் மிகவும் பயன் உள்ள கட்டுரைகள் அடங்கியுள்ளன. பொன்னுங்காணிக் கீரை, பயங்கர நோய் எய்ட்ஸ் முதலுதவிகள் சில, தேனின் மகத்துவம், இன்றைய இளைஞர்களும் போதைவஸ்துக்களும் போன்ற பயனுள்ள கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. — தர்மன்



# நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

## சொல்லும் செயலும்

ஒரு நாள் ஒரு பெண் சந்தைக்குப் புறப்பட்டாள். தானும் அவளுடன் செல்ல வேண்டுமென்று அவளது மகன் அடம்பிடித்துக்கொண்டு சென்ருன்.

''திரும்பிப்போ. நான் வீடு திரும்பி வந்ததும ஒரு பன்றியைக் கொன்று உனக்குக்கறி சமைத்துத் தருவேன்'' என்று மகனுக்குத் தாய் கூறிவிட்டுச் சந்தைக்குச் சென்றுவிட்டாள்.

அவள் வீடு திரும்பி வந்த பொழுது அவளது கணவன் பன்றியைக் கொல்லுவதற்கு முயன்ருன். உடனே அவள் தடுத்தாள்.

''உண்மையில் பன்றியைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் நான் கூறவில்லை. சிறுவனை அமைதிப்படுத்துவதறகாகவே நான் அப்படிக் கூறினேன்'' என்று தாய் சொன்ஞள்.

''அப்படிக் கூறி ஒரு பிள்ளையை எப்படி உன்னுல் ஏமாற்றமுடியும்? ஆரம்பத்தில் பிள்ளைகளுக்கு ஒன்றுமே புலனுகாது அவர்கள் பெற்ருேர்கள் செய்வதை அப்படியே செய்வார்கள். அவர்கள் பெற்ருேர்களிடமிருந்துதான் படிக்கின்ருர்கள். நீ சிறுவனை ஏமாற்றினுல் நீ அவனுக்குப் பொய் சொல்வதற்குக் கற்றுக்கொடுக்கின்ருய்.

ஒரு தாய் தனது பிள்ளையை ஏமாற்றினுல், அவளை அது நம்பாது. இப்படி ஒரு பிள்ளையை வளர்க்கக்கூடாது''- கூறிவிட்டு, அவளது கணவன் பன்றியைக் கொன்ருன்.

## பகற் கனவு

ஒரு நாள் ஒரு மனிதன் வீதிவழியே அலைந்து திரிந்து கொண்டிருந்தான். அப்பொழுது அவன் கைவிடப்பட்ட உறுதி ஒன்றைக் கண்டெடுத்தான்.

அதை அவன் தனது வீட்டிற்கு எடுத்துச் சென்று ஒருவருக்கும்தெரியாமல் மறைத்து வைத்தான்.

தினமும் நடுஇரவில் அந்த உறுதியை எடுத்து இரகசியமாக அதில் கூறப்பட்டுள்ள காணிகளையும் ஏனைய பொருள்களையும் எண்ணிக் கணக்கிடுவான்.

''நான் செல்வந்தனுக வருவேன். விரைவில் இது நடக்கும்''

பகல்வேளையில் அவன் தனது அயலவனுக்கு இப்படிக் கூறிக் கொள்வான்.

''நான்தான் இந்த நாட்டின் ஏகதலைவன். மக்கள் எல்லோரும் நான் சொன்னபடி தான் நடக்கவேண்டும். அவர்களுக்கு என்னை எதிர்க்கும் உரிமை கிடையாது. அவர்கள் நான் ஆட்டுவிக்கும் வெறும் பொம்மைகள்''

இப்படிசில அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் எண்ணிக்கொண்டு செயல்படுகின்ருர்கள்.

ஆனுல் உண்மை நிலை?

# எய்ட்ஸ்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் ஒரு பெண் எய்ட்ஸ் வைரஸுக்களை தன்னகத்தே கொண்டிருப்பின் அவருக்குப் பிறக்கும் குழந்தையும் எய்ட்ஸ் நோயாளியாக பிறக்கும்.

அத்துடன் 'எய்ட்ஸ்' நோயாளியிடமிருந்து பெறும் ரத்தமூலமும் சிறுவர் எய்ட்ஸினுல் பீடிக்கப்படுகின்றனர்.

## அறிகுறிகள்

எய்ட்ஸ் நோய்க்கென திட்டவட்டமான அறிகுறிகள் இல்லை. இதன் நோயரும்புக் காலம் சுமார் 2 வருடங்களாகும்.

நிணநீர்ச்சுரப்பிகளின் வீக்கம் தசைநரம்பு சோர்வு களைப்பு, காய்ச்சல், இரவுநேர வியர்ப்பு, நடுக்கம், வயிற்ருேட்டம், நிறைகுறைதல், சில சமயங்களில் எய்ட்ஸ் வைரஸ், மூளை கலங்களை தாக்குவதால் மறதி, புலம்பும் பேச்சு, வலிப்பு போன்றவை 'எய்ட்ஸ்' சம்பந்தப்பட்ட அறிகுறிகளெனக் கருதப்படுகின்றன.

## நிவாரணம்

இவ்வளவு காலமாக உலகை உலுக்கிவரும் இந்நோய்க்கு மருந்து இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை! ஆயினும் உலகெங்கிலும் பல மருத்துவ நிபுணர்கள் பல்வித மருந்துகளை, பூரண வெற்றியின்றி, பரிசோதித்து வருகின்றனர்.

எய்ட்ஸ் மருந்து எய்ட்ஸ் வைரசுவைக் கொல்லக்கூடியதாகவும், அதே நேரத்தில் செயலிழந்துள்ள நோய்எதிர்ப்புச் சக்தியை வலுப்பெறச் செய்வதாகவும் இருக்கவேண்டுமென எய்ட்ஸ் நிபுணர் ஒருவர் கூறுகிருர். ஆனுல் அதற்குப் பலகாலம் செல்லும் என்பது தெளிவு.

## சமூக விளைவுகள்

இந்த 'எய்ட்ஸ்' மேலைத்தேய நாடுகளின் குறிப்பாக அமெரிக்காவின் 'கலாசார' முறைகளுக்கு அதன் சீரழிவுக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே தோன்றுகிறது. அங்கு நிலவும் 'கட்டுப்பாடற்ற பாலியல் சுதந்திர' (Free Sex) உணர்வைத தகர்த்ததுடன் எய்ட்ஸ் அற்ற (ஆரோக்கிய) வாழ்வுக்கு, 'ஒரு தார உறவே சிறந்தது' என்பதை அங்குள்ள மக்களுக்கு உணர வைத்துள்ளது.

இலங்கை, இந்தியாபோன்ற வளர்முகநாடுகளில் இப்போது இந்த Free Sex உணர்வு தலை தூக்க ஆரம்பித்துள்ளதுடன் போதைவஸ்து உபயோகமும் அதிகரித்து வருகிறது. இதனுல் இங்கும் 'எய்ட்ஸ்' பெருமளவில் உயிர்களைப் பலி கொள்ளலாம். அதனைத் தடுப்பதற்குரிய வழிமுறைகள் மேற்கொள்ளப்பிடவேண்டும்.

## முடிவாக......

எது எப்படி இருப்பினும், உலகையும், மனிதரையும் படைத்த இறைவன். மனித சமுதாயம் விருத்தியடையவும், மனிதனின் வாழ்வைப் 'பூரணப்படுத்தவும்' சில வழிமுறைகளை எமக்குத் தந்துள்ளான். அந்த வழிமுறைகளை மீறுபவருக்கு, அநாகரிக வழிகள் மூலம் 'இன்பம்' அடைய முயல்பவருக்கு இறைவன் அளித்த தண்டனை இதுவெனக் கொள்ளவேண்டும்.

# NEW
# Science Academy

(B. M. C. க்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
ஆரம்பமாகியுள்ளது.

## A/L 87 தாவரவியல்

அலகு 08 இயங்கும் தாவரம்.

BY

**Mr. பாலா.**

விலங்கியல்: **இளங்கோவன்.**

[A-1038]



கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு விருந்து!

# "ஷப்ரு"

வெற்றிக் கிண்ணத்திற்காக
யாழ்ப்பாணம்
கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின்
வெள்ளிவிழா ஆண்டு
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

ஷப்ரு யுனிக்கோ பிறுன்ஸ்
ஆதரவில்
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின்
ஆயர் தியோகுப்பிள்ளை அரங்கில்
ஆகஸ்ட் 17, 19, 24, 30ம் திகதிகளில்.

(A 1037)


## ஓராண்டு நினைவு தினம்



தவத்திரு
முத்துக்குமாரு
மயில்வாகனம்
சுவாமி

திதி: ஆடி சித்திரை

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தின் ஸ்தாபகரான திரு முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின் ஓராண்டு நினைவுதினம் ஆடி 26-ந் திகதி (11-8-86) திங்கட்கிழமை ஆனந்தாச்சிரமத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளதால் இவ் நினைவுதினத்தில் அடியார்களும் அன்பர்களும் வருகைதந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்,
ஆச்சிரம அன்பர்கள்.

C 3989

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# விறகு பெறுவதில் பொதுமக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீண்ட காலத்துக்குப்பின்பு வட்டுக்கோட்டையிலுள்ள அரசாங்க விறகுகாலைக்கு விறகு வந்துள்ளது.

இவ்விறகுகளைப் பெறுவதற்காகப் பொதுமக்கள் அதிகாலை 4 மணிக்கே விறகுகாலை முன்பாக வரிசையில் நிற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அதிகாலையில் போய் நின்று விறகு பெறுவதற்காகத் தமது பெயர்களைப் பதிவுசெய்தாலும் இவர்களில் அரைவாசிப் பேருக்குக்கூட விறகுகிடைக்காது ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்லவேண்டியுள்ளது.

இவ்வாறான சிரமங்களை உரிய அதிகாரிகள் தவிர்க்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

[ச-எ]

## பொதுக்கூட்டம்

திருகோணமலை, சனி

திருகோணமலை இந்து இளைஞர்மன்ற 12வது ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் 20ம் திகதி மகேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

[மா]

## இன்று வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை, தலைவர் திரு. சற். சிங்கராயர் தலைமையில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

[வி]

# நினைவஞ்சலி

3-ம் ஆண்டு — 31-ம் நாள்





| தருமலிங்கம் மகேஸ்வரன் | தருமலிங்கம் இரதீஸ்வரன் |
|---|---|
| தோற்றம்: 1-1-1956 | தோற்றம்: 8 9 1959 |
| மறைவு: 26-7-1983 | மறைவு: 11 7 1986 |

1983-ல் கலவரத்தின்போது அகாலமரணமான மகேசனே!

என் மகனே என்று வந்தாய் என்று கேட்ட தாய்க்கு, அம்மா பொறுத்தருள்க அண்ணன் கடனுண்டு என்றாய் நீ.

குடும்பத்தினர்,

நல்லூர் தெற்கு.

(C 3992)


## சேகரியுங்கள்! சேகரியுங்கள்! சேகரியுங்கள்!

ரொபின் பிரான்ட் சோப் வகைகளின் மேலுறைகளைச் சேகரித்து கவர்ச்சியான பெறுமதி வாய்ந்த பரிசுகளை பெறுங்கள்.

### பங்கு பற்றும் முறை

10 ரொபின் பார் சோப் மேலுறைகளையோ அல்லது 20 ரொபின் அரை பார் சோப் மேலுறைகளையோ அல்லது 50 ரொபின் வைட் சோப் மேலுறைகளையோ அல்லது 50 ரொபின் நீலசோப் மேலுறைகளையோ சேகரித்து, உங்கள் முழுப்பெயர், விலாசம் ஆகியவற்றை 5'' X 2½'' அங்குல வெள்ளை கடதாசியின் ஒரு பக்கத்திலும், நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர் விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அனுப்ப வேண்டும்.

### பரிசுகள்

| | |
|---|---|
| 1-ம் பரிசு | நெசனல் 2in one Set |
| 2-பரிசு | நெசனல் ரேடியோ |
| 3-ம் பரிசு | சுவர் கடிகாரம் |

ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் ரொபின் பிரான்ட் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு கீழ்க்கண்ட பரிசுகள் வழங்கப்படும்!

### வியாபாரிமாரின் பரிசுகள்

| | |
|---|---|
| 1-ம் பரிசு | சுவர்க் கடிகாரம் |
| 2 ம் பரிசு | Air Pot Coolig |
| 3-ம் பரிசு | Thermos சுடுதண்ணீர் போத்தல் |

இம்மேலுறைகளை சேகரித்து டிசம்பர் மாதம் 25-ந் திகதிக்கு முன்பாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

பரிசு இழுப்பு 5-ந் திகதி ஜனவரி மாதம் 1987-ம் ஆண்டு 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் நடைபெறும்.

அனுப்பும் விலாசம்:

# த பெனின்சுலா குரூப்

நம். 9, கண்டி வீதி, நாவற்குளி.

(பெனின்சுலா சவர்க்காரத் தொழிலகத்தின் ஊழியர்கள் இப்போட்டியில் பங்கு பெற முடியாது).

[A 1034]



# PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

1. 'COMPUTER PROGRAMMING COURSE'
   For Professionals and School leavers (6 Months)

   Lectures by:-
   Mr. N. Sundararajah, B.Sc. Eng.) Hons (London), A. M. I. C. E.

   Weekend courses starting on 16th, August. (Saturday)

   Lectures in A. C. Room.
   Practicals on APPLE II.

2. Also weekend courses:-
   'MOTOR MECHANISM'
   'QUANTITY SURVEYING' (Parts I and II) } 6 Months.
   'ELECTRICAL HOUSE WIRING' - 3 Months
   'HOTEL MANAGEMENT and FRENCH' (Week days) - 2 Months.

Details from:

REGISTRAR

## PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

59, ST. PARICK'S COLLEGE ROAD,
JAFFNA.

(A 1036)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் செந்தூரன்

யாழ்ப்பாணம் (யப்பான் ஜுவலர்ஸ்) கனகரெட்ணம் - செல்வமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் செந்தூரன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 10-8-86 வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மெட்ராஸ் பெரியப்பா, அமெரிக்கா பெரியப்பா குடும்பம், லண்டன் மாமா, மாமி குடும்பம், மயூரன், தஞ்சாவூர் மாமி குடும்பம், சுதா, கோயம்புத்தூர் மாமி குடும்பம், ஆர்த்தி, டெல்லி மாமி குடும்பம், அகிமலஸ், வசந்தி மாமி, ஈசாமாமி, சவுதி சித்தப்பா, செல்வி சித்தி, வசந்தா சித்தி, கீதா சித்தி, குட்டிசித்தி, நந்தன் மாமா, சந்துரு மாமா மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் நல்லூர் முருகன் அருளால் சகல கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் வாழவாழ்த்துகின்றார்கள்

[C 3974]

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



### யோசப் எமினியான்ஸ்

[மனோகரன்]

மலர்வு: 18-09-1959

உதிர்வு: 10-08-1985

மகனே மனோகரா எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்றாயே உனை எப்படி அழைப்போம். உன்னை எங்கே காண்போம் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம். உன்பிரிவால் துயருறும்: தாய் சகோதரிகள் உற்றார், உறவினர், நண்பர்கள்.

மணற்குழி,
ஊர்காவற்றுறை.
1-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[C-3984]

## பதிவு அத்தாட்சி பத்திரம்

கொழும்பு, சனி சகல வர்த்தக ஸ்தாபனங்களும் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பதிவு அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்று வர்த்தக கப்பற்துறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி தெரிவித்துள்ளார். (சி-இ)


## மறந்து விடாதீர்கள்!
## இன்று தேசியக் கூழ்

காலை 11-30 மணி முதல் 2-30 மணிவரை. இடத்திற்கு முந்துங்கள் கடந்த வாரம் கூழ் கிடைக்காமல திரும்பிச்சென்றோர் பலர்! இது பூச்சாண்டி அல்ல! உண்மைச்சம்பவம். காரணம்! நாம் தருவது சுடச்சுட தித்திப்பான சுகாதாரமான தேசிய கூழ்.

WE DON'T COPY OTHERS

YARL BEACH INN

யாழ் பீச் இன்

139, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(இயற்கையின் இன்பச் சோலை)

விளம்பர வடிவமைப்பு:- ஜோர் எகட்டன் செனித மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ், யாழ்நகர். (A 1117)


உ

## திருமண அழைப்பு

| | |
|---|---|
| காலஞ்சென்ற V சிவசுப்பிரமணியம் (Proctor Ward and Davy, Jaffna) திருமதி த. சிவசுப்பிரமணியம் அவர்களினது மகன் | திரு. T. பத்மநாதன். (இளைப்பாறிய P.H.I) வாழைச்சேனை திருமதி T. பத்மநாதன் அவர்களினது மகள் |
| செல்வன் S. அமர்நாத் அவர்களுக்கும் | செல்வி ராஜினி அவர்களுக்கும் |

1986 ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி நண்பகல் 12.00மணிக்கும் பிற்பகல் 1 00மணிக்கும் இடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் லண்டன் ARCHWAY முருகன் ஆலயத்தில திருமணம் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| 86, Fulbourn Road, | 13, Selkirk Court, |
| Waltham Stow, | Whitley Road, |
| LONDON E-17. | LONDON N-17 |

(C 3897)


# நெஸ்பிரே பருகி வெற்றியீட்டுங்கள்!

## ஒவ்வொரு பக்கெட்டிலும் அன்பளிப்பு... புலமைப்பரிசில் வெல்வதற்கான வாய்ப்பு.




நெஸ்பிறே அருந்துவோரே!

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நெஸ்பிறே, உடன் நெஸ்பிறே பக்கெட்டிலும் உங்களுக்கு இலவச அன்பளிப்பு. அத்துடன், ரூ. 10,000 பெறுமதியான புலமைப்பரிசில் ஒன்றை வெல்லும் அதிஷ்டம் உங்களுக்குக் கிடைக்கலாம்.



### இலவச அன்பளிப்புகள்

விசேட ஊக்குவிப்பு விளம்பரத்தை முகப்பில் கொண்ட ஒவ்வொரு நெஸ்பிறே பக்கெட்டினுள்ளும் பின்வரும் இலவச அன்பளிப்புகளில் ஒன்று இருக்கும்: நான்கு அற்புதமான குறிப்பேடுகள் இரண்டு சிறந்த நிறப் பேனைக்கள்.

### நெஸ்பிறே புலமைப்பரிசில்கள்

ஒவ்வொரு நெஸ்பிறே குறிப்பேட்டின் பின் அட்டை இடதுபக்க அடி மூலையிலும் 1,2,3, அல்லது 4 என்று இலக்கமிடப்பட்ட, கிழித்தெடுக்கக்கூடிய அடையாளத் துண்டுகள் உள்ளன. இவை நான்கையுமே சேகரித்து, உங்கள் பெயர், முகவரியை எழுதி, கூப்பனில் காணப்படும் வாக்கியத்தையும் பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

நெஸ்பிறே புலமைப்பரிசில் போட்டி
த.பெ.எண் 189, கொழும்பு.

### விதிகள்.

(அ) ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 1, 2, 3, 4 ஆகிய நான்கு இலக்க அடையாளத் துண்டுகளும் இணைக்கப்பட வேண்டும்.
(ஆ) விண்ணப்பங்கள் தனித் தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
(இ) போட்டி 1986 ஓகஸ்ட் 15 வரை நடைபெறும். ஆகவே, விண்ணப்பங்கள் அத்திகதியில் அல்லது அதற்கு முன்பு எமக்குக் கிடைக்க வேண்டும்.
(ஈ) வெற்றியீட்டும் 5 பேரைத் தெரிவுசெய்வதற்கான சீட்டிழுப்பு 1986 ஓகஸ்ட் 18 நடத்தப்பட்டு, முடிவுகள் இந்தப் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.
(உ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. எவ்வித கடிதத் தொடர்புக்கும் இடமில்லை.
(ஊ) நெஸலே நிறுவனம், நியமிக்கப்பட்ட நெஸ்பிறே விற்பனை நிலையங்கள், தொமஸன் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கையில் வாழும் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

கூப்பன்:
பெயர்: ______
முகவரி: ______
______
______
நெஸ்பிறே-வளரும் ______ ______
___




## நெஸ்பிறே - வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.

JWT NL 1956 Licence No S 522

A773

பனம்பொருள் அபிவிருத்திச்
சபையின் அனுசரணையுடன்
## யாழ் பீச் இன்சின்
## ஆதரவில்
ஜோ. எகட்டன் வழங்குகிறுர்
### இடம், பொருள், ஏவல்
அறியப்பாருங்கள்
### அடுத்த ஞாயிறு (17-8-86)
### ஈழநாடு வாரமலரை
நன்றி
சேனித் மார்கட்டிங் அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
யாழ். நகர்.
[A1118]

முற்றிலும் தன்னியக்க
இயந்திரங்கள் மூலம்
தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

## பிரயாண ஒழுங்கு
மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி
நாடுகளுக்கான ஸ்பொன்சர் விசா
முறையிலான பிரயாண ஒழுங்குகள்

1. ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலியில் உறவினர்கள் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
2. கனடா, பிரயாண ஒழுங்கும் பாஸ்போட் பொண்ட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
### B. A. ஞானசோதி (சோதி)
பழைய பொலிஸ்நிலைய ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
மு. கு. சென். மேரிஸ்சேச் முன்பாக உள்ள வீதி.
(C3965)

# MIDDLE EAST
## வாய்ப்புக்கள்...... பொன்னுன வாய்ப்புக்கள்......
இதோ... ஒரு அரிய சந்தர்ப்பம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லக்கூடிய மிக இலகுவழி வாய்ப்புக்களை பிரபல குவைட் தொழில் வல்லுனர் "அல் ஷாயிட்" உங்களுக்குத் தருகிறுர்.

## இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய
## EASY WAY TO GO ABROAD
## வாய்ப்புக்கள் இப்பொழுது இலங்கையில்.....

......... பல்வேறு விதமான வாய்ப்புக்கள்... தகைமை வாய்ந்தோர் முதல்...... தகைமையற்ற தொழிலாளர் வரை, யாவருக்கும் உகந்த வாய்ப்புக்கள்.

★ மருத்துவத்துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Doctors, Lab - Technicians. X' Ray Technicians, Male and Female Nurses, Pharmacists Etc...
★ இன்ஜினியரிங் துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Engineers, Architects, Draughtsmen, Surveyors Etc .
★ அக்கவுன்டன்ஸி துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Accountants, Auditors, Book-Keepers, Account Clerks, Audit Clerks Etc...
★ HOTEL துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Receptionists, Cashiers, Bell-Boys, Room Boys, Room Maids, Chefs, Cook Helpers, Stewards, Barmen, Waiters, Dishwashers, Laundrymen, Doormen, Cleaners, Tailors, Barbers Etc...
★ SUPERMARKET தொழில் வாய்ப்புக்கள்... Managers, Supervisors, Salesmen, Salesgirls, Etc...
★ PRINTING துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Printers [Letter Press and Off-set], Machine minders, Binders Etc...
★ VETERINARIAN [FARM], Store keepers, Security Officers, Clerks, Steno-Typists, Typists, Office Boys, தொழில் வாய்ப்புக்கள்...
★ கார்பென்டர்ஸ், மேசன்ஸ், இலக்ட்ரீசியன்ஸ், பைப்-வேலையாட்கள் (Plumbers), பாரவாகன டிரைவர்ஸ் (Heavy Vehicle Drivers) தொழில் வாய்ப்புக்கள்.
★ இலவசமாகப் போகக்கூடிய ஹவுஸ்-மெய்ட், ஹவுஸ்போய்ஸ், ஹவுஸ் டிரைவர்ஸ், கப்பள்ஸ் (Couples) தொழில் வாய்பபுக்கள்.
★ ஆங்கில அறிவில்லாதோர் அல்லது தொழில் அனுபவமில்லாதவர்கள் Factory / Farm லேபரர்ஸ்களாக, Airport / Hospital / Municipal கிளீனர்ஸ்களாக, சுப்டர் மார்க்கெட்டில் பொருள் அடுக்குபவர்களாக, (Shelf Filler), பார்சல் கட்டுபவர்களாக (Packers), போட்டர்ஸ் (Porters)களாக செல்லக்கூடிய தொழில் வாய்ப்புக்கள்...

இலங்கை நாணயப்படி ரூபா 3000/- முதல் ரூபா 35000/-வரை மாதம் சம்பாதிக்கக்கூடிய தொழில் வாய்ப்புக்கள்.

30 நாட்கள் முதல் 45 நாட்களுக்குள் போகக்கூடிய தொழில் வாய்ப்புக்கள்,

திறமையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட, வயது வரம்பில்லாத வாய்ப்புக்கள்.

பணம் கொடுத்து ஏமாற தேவையில்லா இலவச வாய்ப்புக்கள்.
பல்வேறு பொன்னுன வாய்ப்புக்கள். இன்றே விரையுங்கள். நாளை நாளை என்று காத்திருக்காது இன்றே விரையுங்கள் ஒருவேளை நாளை - அல் ஷாயிட்டின்-இந்த வாய்ப்புக்கள் உங்களுக்கு கிடைக்காது போகலாம்
அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம், விபரக்கைநூல் விளக்கப்பிரதி ஆகியவற்றைப்பெற ரூபா 150/- மணியோடர் மூலம் எங்களுக்கு அனுப்பவும். தபால் செலவு இலவசம். மணியோடரில் போஸ்ட் ஆபிசைக் குறிக்கும் இடத்தில் G P O — Colombo என எழுதவும். அத்துடன் உங்கள் விலாசத்தையும் எமக்கு தெளிவாக தரவும்.

## Transworld Associates, Kuwait
அனுசரணையுடன்—இலங்கையில்...
# TEAMS (LANKA) ENTERPRISES,
### P. O. BOX: 1910, COLOMBO, Sri Lanka.
### (குவைட் ஸ்தாபன அங்கீகாரத்துடன்)
Labour Licence No. 438,
Labour Dept Approval
No. AL / 438 / 1 / 2 / 3 / 85
AL / 438 / 4 / 86.
(A 996)

## பிரயாண ஒழுங்குகள்
★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண
ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
## INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.
(A-1029)

கப்பலில் செல்வதற்கு
## பிரயாண ஒழுங்குகள்
கப்ரின் ஒபிசர் 1, ஒபிசர் 2, ஒபிசர் 3,
எஞ்சினியர் 1, எஞ்சினியர் 2, எஞ்சினியர் 3,
எஞ்னியர்4, றேடியோ ஒபிசர், எலற்றீசியன்,
போசன், குக், ஒயிலர் (ஏ. வி) (A. B.)
ஆகியோர்க்கு உடன் பிரயாணவசதிகள் செய்து
கொடுக்கப்படும்
அத்துடன் பெய்ரூட்டில் பொதுவேலையாளர்கட்கு
15 நாட்களில் பிரயாண வசதிகள் செய்துகொடுக்
கப்படும். கடவுச்சீட்டுடன் மூன்று புகைப்படங்
களுடன் நேரில் வரவும்.
பாஸ்போட், பொண்ட் உடனுக்குடன் செய்து
கொடுக்கப்படும்.
## நியூ மரியா
## சிப்பிங் அன் ரவல்
185/3, நியூ லலிதா பில்டிங்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [A-1027]

## பிரயாண ஒழுங்குகள்
★ ஈராக் (லேபறேஸ்)

உடனடியாக ஒழுங்குகள் செய்து
கொடுக்கப்படும்.

★ சவுதி - ஆஸ்பத்திரி, விமானநிலைய
கிளீனேஸ்

★ குவைத்— ஆஸ்பத்திரி கிளீனேஸ்

பிரயாணம் செய்யவிரும்புவோர் உடனடியாக
எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
### டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்,
(கற்பகப் பிள்ளையார் கோவிலடி)
உடுவில் கிழக்கு - உடுவில்.
(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னுல் உள்ள ஒழுங்கையால் வரவும்.)
(C 3952)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 10-8-86

## யாழ். 'மினிபஸ்' சேவை

# புதிய ஒழுங்குகளுக்கமைய 15ம் திகதிமுதல் செயல்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் நகரில் சேவையிலீடுபடும் மினிபஸ்கள் புதியஒழுங்குமுறைகளுக்கமைய, இம்மாதம் 15ந் திகதிமுதல் புதிய இடங்களில் நிறுத்தப்பட்டு சேவையில் ஈடு டும்.

இத்திட்டத்தின் மூலம் நகரத்தின் பஸ்நிலையச் சுற்றுடலுக்கும் பொதுமக்களுக்கும் ஒத்துழைப்புநல்கமினிபஸ் உரிமையாளர்கள் முன்வந்துள்ளனர்.

நேற்று நல்லூர் இந்துவிடுதியில் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ வீ.கே. சிவஞானம் வடபிரதேச மினிபஸ் உரிமையாளர்களை சந்தித்தபோது மேற்கண்டமுடிவுகள் எடுக்கப்பட்டன. இத்திட்டத்தின்படி ஒவ்வோர் பகுதிக்கும் செல்லும் மினிபஸ்கள் இரண்டுமட்டும் ஒரேசமயத்தில் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்திவைக்கப்படும்.

மேலதிகமான மினிபஸ்கள் விக்டோரியா வீதியிலும் இலங்கை வங்கி அமைந்துள்ள வீதிப்பகுதியிலும் நிறுத்தி வைக்சப்படும.

யாழ் ஆஸ்பத்திரிக்கும், யாழ்.பஸ்நிலையச் சுற்றுடலுக்கும், இப்பகுதி வீதிகளில் போக்குவரத்துச் செய்வோர்களுக்கும், இடையூறாக, பஸ்கள் நிறுத்திவைப்பது தடுக்கப்படும் நகரில்பஸ்களின் வேகக்கட்டுப்பாடும்குறைக்கப்படும். போக்குவரத்து விதிகளுக்கமைய ஒரு வழிப்பாதைகளில் வாகனங்கள் செல்வது அனுமதிக்கப்படமாட்டாது.

இந்தநடைமுறைகளை மினிபஸ் உரிமையாளர்கள் தாமாகவே விரும்பி, ஏற்றுள்ளனர்.

இவை அவ்வப்பகுதி மினிபஸ்சேவைச் சங்கங்கள் மூலம் இம்மாதம் 15ந் தி தி முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

மற்றும், நடைபாதை வியாபாரிகளுக்குப் புதிய இடமொன்று ஒழுங்கு செய்யப்படுமென்றும் தெரியவருகிறது.

இவ்வாறான படிப்படியான ஒழுங்குகள் மூலம் யாழ்.நகரத்தை பொதுமக்களின் நன்மைக்குகந்ததாக மாற்றுவதற்குத் தாம் முயல்வதாக ஆணையாளர் திரு சிவஞானம் கூட்டத்தில் தெரிவித்வார்.

(ச-இ)

## கோவளம் பகுதிக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின்கீழ் காரைநகர் கோவளம்பகுதிக்கு சுமார் மூன்றரை லட்சப் ரூபா செலவில் மின்சார வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

1985ம் ஆண்டுக்கான இந்நிதி மூலம் இப்பகுதி மின்சார வேலைகளில் ஒரு பகுதி கடந்த ஆண்டு நடைபெற்றது. இந்த நிதி ஒதுக்கீட்டிற்கான சகல முயற்சிகளையும் கோவளம் கிராம அபிவிருத்தி சபை மேற்கொண்டுள்ளது.

(சி-எ)

## வன்முறை நடந்தால் 89-ம் ஆண்டிலும் தேர்தலை எதிர்பார்க்க முடியாது'

கொழும்பு, சனி

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் எதிர்பார்ப்பதுபோல் இன்றையசூழ்நிலையில்பொதுத் தேர்தல் நடத்துவது என்பது முடியாத காரியம். நாட்டின் வன்முறை தொடர்ந்து நீடிக்குமானல் 1989ம் ஆண்டில் கூட பொதுத்தேர்தலை நாம் எதிர்பார்க்க முடியாது. இதனை சுதந்திரக் கட்சியினர் கவனத்தில் கொள்ள வேண்டும்".

மாகாணசபைகள் யோசனைகள் சம்பந்தமான விளக்கக் கூட்டத்தில் உரையாற்றிய சமசமாஜக் கட்சித்தலைவர் கலாநிதி கொல்வின் ஆர்.டி, சில்வா மேற்கண்டவாறு கூறினர்.

லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டி ஒழுங்கு செய்திருந்த இக்கூட்டத்தில் கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா தொடர்ந்து உரையாற்றுகையில்; "ஜனாதிபதி ஜெயவர்த்தன அனைத்து அரசியல் கட்சி மகாநாட்டில் சமர்ப்பித்திருந்த மாகாணசபை யோசனைகள் சிங்கள மக்களுக்குப் பாதகமாக அமையும் எனப்பயந்து மகாசங்கத்தினரும் சிங்கள மக்களும் எதிர்ப்பார்களேயானல் இந்த நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்பட அதுவழிசமைப்பதாக அமையும்" என்றார். (வா)

## "திருமலை துறைமுகத் தாக்குதல் அரசின் பொருளாதாரத்தை அழிக்கும் நடவடிக்கையே"

### ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், ஞாயிறு.

"திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் 'மட்கோவ், பிரிவின் மீது இம்மாதம் 6ம் திகதி அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையினுல் மேற்கொள்ளப்பட்டது" என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இத்தாக்குதல் ஸ்ரீலங்கா அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அழிவுத்தாக்குதலாகும். இத்தாக்குதலால் அரசிற்கு 2 கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இத் தாக்குதலின் போது இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான பல படகுகள், வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. அத்துடன் இத்தாக்குதலின்போது சில ஆயுதங்களும், பெருந்தொகையான தோட்டாக்களும் சக்தி மிக்க தொலை தொடர்பு சாதனங்களும் மக்கள் விடுதலைப் படையினரால் கைப்பற்றப் பட்டது.

"இதன்போது எமது தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை இத்தாக்குதலின்போது எம்மால் சிறைபிடிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்குதல் பூர்த்தியானவுடன் விடுவிக்கப்பட்டனர்."

[ரா-இ]

## மோட்டார் சைக்கிள் விபத்து; சிறுவன் பலி, மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். நாவலர் வீதி, பிறவுண் வீதி சந்தியில் மூன்று மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதனுல் சிறுவர் ஒருவர் மரணமானார். மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதப்பட்ட மோட்டார் சைக்கிளில் ஒன்று நிறுத்தப்படாமல் அதனைச் செலுத்தி வந்தவர்களால் ஓட்டிச்செல்லப்பட்டது.

நேற்று நண்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் கிளிநொச்சி 3-ம் வாய்க்காலைச் சேர்ந்த சுப்பையா - மோகன் என்ற 15 வயதுச் சிறுவனே மரணமானவராவர்.

காயமடைந்த செல்லையா - விமலேந்திரன் (30 வயது(, சுல்தான் (85 வயது), நகுலேந்திரன் (26 வயது) ஆகிய மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவலர் வீதியில் கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் இருமோட்டார் சைக்கிள்கள் வந்துகொண்டிருந்தனஎன்றும், இதே சமயம் பிறவுண் வீதியிலிருந்து மற்றொரு மோட்டார் சைககிள் நாவலர் வீதியில் வந்து திரும்பிய சமயம் மூன்று மோட்டார் சைக்கிள்களும் மோதப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பிறவுண் வீதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிலேயே விபத்தில் மரணமான மோகன் பின் ஆசனத்திலிருந்தார்.

விபத்தில்சிக்கிய மோட்டார் சைக்கிளில் இரண்டு நேற்றுப் பிற்பகல் வரை வீதியிலேயே கிடக்கக் காணப்பட்டன.

காயமடைந்தவர்களை வான் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரியில் பொதுமக்கள் சேர்ப்பித்தனர்.

[ச]

## மருத்துவப் பட்டப்படிப்பு: பரீட்சையில் சித்திபெற்றோர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த மாதம் நடைபெற்ற மருத்துவப் பட்டப்படிப்பிற்கான இரண்டாம் ஆண்டுப் பரீட்சையில் சித்தி பெற்றோரின் விபரம்: முதலாம்தரம்; கே. உமாபதி, இரண்டாம் தரம்: செல்வி என் டி. அந்தோனிமுத்து, செல்வி ஜ. ஏ. எவ். அனுஷா, செல்வி சி. அரியரத்தனம், செல்வி வி. இந்துமதி, பி. ஜீ ரா, செல்வி ரி. கமலலோஜினி, செல்வி பி. நளாயினி, ரி. பேரானந்தராஜா, பி. பிரபாசரன், செல்வி எஸ். ரட்ணசபாபதி, செல்வி எஸ். சத்தியபாமா, செல்வி எஸ். ஸ்ரீ ரங்கநாதன், செல்வி எஸ். எஸ். சுபோதினி. எஸ். சுவேந்திரன், எஸ் சுதன் செல்வி எஸ். குமுதினி,

சாதாரண சித்தி என். அருளானந்தம், எஸ். அசோகன், எஸ். அசோக்குமார், செல்வி ஏ. செல்லையா, செல்வி என். தேவகி, செல்வி எச். துரைச்சாமி, எஸ் ஜீவாதரன் ரி. ஜெயக்குமார், செல்வி, ஜே. ஜெயராசா, செல்வி எஸ் கலையழகி, செல்வி எஸ். கனகலிங்கம், எஸ். கருணாகரன், செல்வி எஸ். சோமணஸ்வரி, செல்வி எஸ். லோ நாயகி, செல்வி ரி. மகேஸ்வரி, செல்வி வை. நமசிவாயம், வி. நல்லநாதன், எஸ் நவநீதன், செல்வி ஆர். நமசிவாயம், செல்வி ஆர் நிரஞ்ஜனி, கே ராஜசேகரன், செல்வி ரீ. ரஜனி, டி. ரஞ்சித், செல்வி என். சத்தியா, ஏ. சத்தியசீலன், பி. சிவானந்த், செல்வி எஸ். சிவகஜனி, செல்வி பி. தாரிணி, எம். தியாகராசா, செல்வி வி வாசுகி, எவ். ஏ. வின்சென்ற், செல்வி கே விதுரா, செல்வி எஸ். பாலசுப்பிரமணியம், ரி லகுணராஜன், எம் ரி இப்ராகிம், ஜே. சிவ மனோகரன் ரி தெய்வீககுமரன், ரி ஜெயரதன், எம். மதியழகன், செல்வி சி. நடராஜா யா. ஏ சபேசன், எஸ்.சிவகுமார், எஸ் சிவமோகன், எஸ். விபுலேந்திரன்.

நூனசித்தி: செல்வி வி. சித்திரா, ஆர். கேசவன், ரி. கேதீஸ்வரன், ரி. இ மல்கம், செல்வி எஸ் மீரா, செல்வி கே பொன்னுத்துரை, வி. ராஜசேகரன். செல்வி என். ஏ செபமாலை, செல்வி என். செல்லத்துரை, என். சிவகாந்தன், எஸ் சிவநாதன் ரி. சிவசீலன், எஸ். சிவயோகன். ரி திருவல்லபன், பி சிவகுருநாதன், வி கமலானந்தன், ரி சோணேஸ்வரன், வி முரளி

மீள் நூனசித்தி: ஏ. சண்முகநாதன். [ஒ-ஆ]

## முல்லைத்தீவு நகரில் பதற்றம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு இராணுவமுகாமிலிருந்து கால்நடையாக வெளியே வந்த இராணுவத்தினர் நகரைச் சுற்றிவளைக்கமுற்பட்டபோது போராளிகள் தாக்குதல் மேறகொண்டதில் இராணுவத்தினர் மீண்டும் முகாம திருப்பினர்.

இதனுல் நகரில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. [சி]

## 500 அகதிகள் குடும்பம் திரியாய் செல்ல மறுப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

முல்லைத்தீவில் தற்பொழுது தங்கியுள்ளதிரியாயைச்சேர்ந்த 500 அகதிக் குடும்பங்களுக்கு ஒரு வாரத்துக்குரிய உணவு வகைகளையே அரசாங்கம் வழங்க விருக்கிறது

இதேபோன்று கிளிநொச்சி அகதிகளுக்கும் ஒரு வாரத்துக்குரிய உணவுகளையே வழங்க விருக்கிறது.

திருகோணமலை அரச அதிபரையும், முல்லைத்திவு அரச அதிபரையும் அழைத்து நடாத்திய கூட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் மேற்கண்டவாறு முடிவு எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

திருகோணமலையில் இருந்து அகதிகளாகச் சென்று முல்லைத்தீவில் தங்கியுள்ள அனைவரையும் திரும்பவும் அவ்வப்பகுதிகளுக்கு வந்துகுடி அமரும்படியும் புனர்வாழ்வு அதிகாரிகள் வேண்டுதல் விடுத்திருக்கின்ற போதும் திரியாயை சேர்ந்த 500 அகதிகள் குடும்பமும் தாம் திரும்பவும் செல்ல மறுப்பு தெரிவித்துள்ளனராம்.

திரியாய் அகதிகள் 10 பேர் கொண்ட குழுவினரை திருகோணமலை சென்று நிலவரத்தைப் பார்த்து வர ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தெரிகிறது.

இது தொடர்பான விடயங்களில் இணைப்புக்குழுசெயலாளர் திரு. சிவானந்தராசா ஈடுபட்டுள்ளார், (ச)

## விடுதலை

வெளிநாட்டுக்கு செல்வதற்காக கொழும்பு செல்லும் வழியில் றம்பகாவ என்னுமிடத்தில் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறை, பொலிகண்டி. இன்பருட்டியைச் சேர்ந்த வி. சந்திரகாந்தலிங்கம், எஸ் பாலச்சந்திரன், எஸ். கோபாலராசா, ஏ அருட்குமார், எம். தவராசசிங்கம் என். சதானந்தம், எஸ்.மோகனராசா ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களுக்கு நடத்தப்பட்ட ஆங்கில தகுதிகாண் பரீட்சை சித்தி முடிவுகள் இம்மாதம் 20-ம் திகதி அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ]

## பயிற்சிக் கருத்தரங்கு

சாவகச்சேரி, சனி

பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிக் கருத்தரங்கினையும், முகாமையும் அறவழிப் போராட்டக் குழு இம்மாதம் 12-ம் திகதி முதல 25-ம் திகதி வரை கைதடி நவீல்ட் பாடசாலையில் நடாத்தவுள்ளது.

[ஊ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.